# சரவணபவம்



அமரர்


## கந்தையா சரவணபவன்

25.09.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# கந்தையா சரவணபவன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**25.09.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

நீக்கமற நிறைந்து

நிழல் தந்து

தூக்கமற்று எமைக்காத்து

துயர் வென்று

ஆக்கவேண்டியனவெல்லாம் ஆக்கி

எமை ஆளாக்கிவிட்டு நினைவாகிப் போன

எம் குடும்பக் காவியம்

**அமரர் கந்தையா சரவணபவன்**

அவர்களின் பாதக் கமலங்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்

என்றும் உங்கள் நினைவுகளோடு வாழும்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தையா கைகளில்
1944.07.14

கந்தையன் கழல்களில்
2021.08.26

அமரர்

# கந்தையா சரவணபவன்

## திதி வெண்பா

சீர் பூத்த சிறப்பு பிலவ வருஷத்தில்
சிறப்பு மிக்க ஆவணி மாதத்தில்
கார் பூத்த கிருஷ்ண பஞ்சமியில் - காலனணுக
கந்தனடி சேர்ந்தான் பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதி சூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கண்களிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திருமாறு
மறந்திடும் ஆகாதே
மாலறியா மலர்ப் பாதம் இரண்டும்
வணங்குவதும் ஆகாதே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.


## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே

## வாழ்த்து

சீரார் நவாலியூர் செய்ய முருகவேள்
தாராரும் தாள்கள் தரிசித்தோர் - ஆரா
அமிழ்தம் பெறுவர் அவனிதனில் வாழ்வர்
தமிழுள் ளளவும் தழைத்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா சரவணபவன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரநிலை அடைந்த முருகேசு+இலட்சுமி தம்பதிகளின் மகன் கந்தையா அவர்களிற்கும், காரைநகர் வாழ் அண்ணாவியார் கணபதிப்பிள்ளை+பொன்னம்மா தம்பதிகளின் புதல்வி பாக்கியம் அவர்களிற்கும் 1944 ஆடி 14 அன்று நான்காவது பிள்ளையாக யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பிறந்தவர் தான் அமரர் "கந்தையா சரவணபவன்" அவர்கள். பவன் என்று அன்பாக மற்றவர்களால் அழைக்கப்படும் சரவணபவன் அவர்கள் விசாகபூஷணம் (கனடா), விசாகரத்தினவேல், லிமா லோகேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதியர்), கோமதிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சயலொளிபவன் (பிரான்ஸ்), ஸ்கந்தமலர் (பிரான்ஸ்), குகபூஷணி (ஓய்வுபெற்ற இலங்கைவங்கி உத்தியோகத்தர்), கோடீஸ்வரி (ஜேர்மனி), ஸ்ரீகௌரி (லண்டன்), கேதீஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசத்திற்குரிய சகோதரராய் வளர்ந்து வந்த காலமதில் 1952ம் ஆண்டளவில் மூளாயிற் குடிபுகுந்து தனது ஆரம்பக்கல்வியைத் தொல்புரம் அமெரிக்கன் மிஷனிலும், 5ம் வகுப்பின் பின் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் பயின்றிருந்தார். கல்வி கற்கும் காலங்களில் முதன் மாணவனாகவும், துடிப்பானவனாகவும் காணப்பட்டதனாலும் சரஸ்வதிதேவியை அதிதேவதையாய்க் கொண்ட அஸ்வினி நட்சத்திரத்தில் பிறந்ததனாலும் ஆசிரியர்களின் கவனத்தை ஈர்த்த முதன் மாணாக்கனாக வலம் வந்தார். மற்றைவர்களை விட வித்தியாசமாகக் கருத்தை ஈர்ப்பதில் அவரது இடதுகைப் பழக்கமும் ஒன்று.

இரண்டாம் வகுப்பில் பாடசாலை முடித்து வீடு திரும்புகையில் சக பாலர்கள் கவனமாக வருகிறார்கள் என்று கவனித்தக்கொள்ளும் சுபாவம் பவனிற்கே உரித்தானது. வளரும் காலங்களில் பௌதீகவியலில் இவரின் மதிநுட்பத்திறமை கண்ட ஆசிரியர் இவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்குப் பதிலளிப்பது சவாலாகவிருக்கும் என்று அவர் மூத்தசகோதரிகளிடம் கூறி வியப்பது குறிப்பிடத்தக்கது.

புத்திக் கூர்மையுடன் தனது திறமைகளைப் பன்முகமாக வெளிப்படுத்துவதில் இவருக்கு இருந்த ஆர்வம், கல்வியில் உச்சம்பெற்று சாதிக்க வேண்டிய பாதையை திசைமாற்றி அதற்கான ஊக்கத்தை மட்டுப்படுத்திவிட்டது. மிருதங்கம், ஆர்மோனியம், வீணை போன்ற வாத்தியங்களை முறைப்படி பயிலாவிட்டாலும், சூழ இருந்த வாத்தியக் கலைஞர்களின் ஒத்துழைப்புக்களினாலும், அண்ணாவியார் வழிவந்த வழித்தோன்றலினாலும் தனது சுயமுயற்சியின் மூலம் பயின்று பின்னைய நாட்களில் ஒரு வித்துவானாகத் தன் புலமையைக் காட்டியவர்.

ஒரு இசைக் கலைஞனிற்குரிய எந்த இராகத்தையும் சரியாகக் கண்டறிந்து சொல்லும் புலமை இவருக்குள் இருப்பது இவரது இசை ஞானத்திற்கொரு சான்றாகும். திரு. சிவசண்முக மூர்த்தியின் கதாப்பிரசங்களில் ஆர்மோனியம் வாசிப்பவராகவும், ஆர்மோனிய விற்பன்னரான தனது மைத்துனர் முருகையா அவர்கள் தமது வில்லிசையில் கலந்துகொள்ள முடியாத ஓரிரு சந்தர்ப்பங்களில் அவரிற்குப் பதிலாக திரு. சின்னமணியுடனான வில்லிசைக் குழுவில் இணைந்து கொண்ட சந்தர்ப்பங்களுமுண்டு. சிறந்த பாடகனும் கூட. ஒரு முறை "நான் உன்னை அழைக்கவில்லை. என் உயிரை அழைக்கிறேன்" என்று உள்ளம் உருகி பவன் பாடுவதைக் கேட்டு அவர் நண்பர்கள் விம்மி விம்மி அழுததாக அவர் சகோதரி சொல்லக் கேட்டிருக்கிறேன். அருள் நெஞ்சம் இருந்தாலும் அடாவடிக்காரரையும் இவர் விட்டுவைத்ததில்லை. கராத்தே, மல்யுத்தம் போன்வற்றில் பயன்படுத்தப்படும் அடியும் பிடியும் அவருக்கு மிக இலகுவாக கைவந்தன.

அது மட்டுமன்றி பழுதடைந்த வானொலிகள், தட்டச்சுப் பொறிகள், தையல் இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள், கார் மற்றும் தற்கால இலத்திரன் சாதனங்கள் போன்றவற்றிற்கு மீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கொடுத்து இயங்கச்செய்யும் அற்புதமான தொழினுட்பவியலாளர்.

அந்த நாட்களில் மறைந்த மாமனிதர் "கலைஞானி" அவர்களின் ஸ்ருடியோவில் பயிற்சியாளராய் சேர்ந்து நவீன மயப்படுத்தப்படாத புகைப்படக் கருவிகளைக் கொண்டு படங்களை வடிவமைத்துக் கொடுத்த நுட்பசிந்தனைகளைக் கொண்ட ஓர் சிறந்த புகைப்பட கலைஞர். அசோகா போட்டோ ஸ்ருடியோவில் பணியாற்றியதும் குறிப்பிடத்தக்கது.

அவர் கல்வி பயிலும் காலங்களிலே தனது கல்வியை ஆங்கிலமொழி மூலம் தொடர்ந்த ஓர மாணாக்கன். நேர்த்தியாகவும் சரளமாகவும் ஆங்கிலத்தில் உரையாடும் புலமை இருந்தாலும், "நான் தமிழன் தமிழில் தான் பேசுவேன்" என்று தேவையற்று எந்தவொரு ஆங்கில வார்த்தையையும் உபயோகிக்காமல் தமிழிலேயே உரையாடலை நகர்த்தும் ஓர் தமிழ்ப்பற்றாளன்.

அன்றைய காலங்களில் முன்னணியில் வலம்வந்த நடிகர் சிவாஜிகணேசனின் மிகப்பெரிய ரசிகன், பக்தன் என்று சொல்லலாம். நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக நடிகர் திலகம் அவர்கள் மூளாய் வந்த பொழுதினில், அந்த சிறுவயதில் பராசக்தி திரைப்பட வசனம் ஒன்றை (மனப்பாடம் பண்ணி வைத்திருந்ததை) சிவாஜி முன் பேசிக்காட்டிய போது "நீ நல்லா வருவாய்" என்று சிவாஜிகணேசனின் கைகளால் பவனின் முதுகைத் தட்டி பாராட்டியதே பவன் அவர்கள் வாங்கிய முதல் விருது. நடிகர் சிவாஜிகணேசனில் அதிகமோகம் கொண்டிருந்தமையால் அவர் இளமைக்கால செயற்பாடுகள் யாவும் சிவாஜியை ஒத்ததாகவே காணப்படும். இலங்கையில் வெளிவரும் நடிகர்திலகத்தின் படங்களில் முதல் நாள், முதற் காட்சியில் இவரை நிச்சயமாகக் காணமுடியும். இவ்வாறே இவரது உயர்தரப்பரீட்சையில் இரசாயனவியல் பாடப்பரீட்சைக்குப் போகாமல் சிவாஜிகணேசனின் முதற் காட்சியைப் பார்க்க திருட்டுத்தனமாகப் போனதை மிகப் பெருமையாகக் கூறுவார். இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்புகளினாலே தனது தந்தையின் நியாயமான கோபங்களுக்கு அடிக்கடி ஆளாவதுமுண்டு.

அந்த நாட்களில் குந்தியின் செல்வனாய் தோன்றிய நாடகமேடை யாவும் அவர் நடிப்புத்திறமைக்கு ஒரு சான்று. கர்ணணாய் வேடமிட்ட அவருருவிலே நிஜ கர்ணனைக் கண்டார்கள் அவ்வூர் மக்கள். "அம்மா! நீ எங்கிருக்கிறாய்" என்று கர்ணனாய் கலங்கிய தவிப்பில் "நான் இங்கிருக்கிறேன் ராசா" என்று சொல்லுமளவிற்கு அவர் அன்னையைத் தடுமாறச் செய்த அவர் நடிப்பு மிக யதார்த்தமானது. அதனைப் பாராட்டி 2011ல் "குந்தியின் செல்வன்" என்ற விருதினை வழங்கிக் கௌரவித்திருந்தார்கள் தொல்புரம் கலாலயத்தினர்.

எதைப் பார்த்தாலும் அதை ஓவியமாகப் பிரதி செய்வதே அவரது பொழுதுபோக்கு. சிறுவயதில் கல்வி கற்கும் வேளையில் கிறுக்கி எறியும் கிறுக்கல்கள் கூட அற்புதமான ஓவியமாகவே இருக்கும் படிக்கும் வயதினில் படிக்காமல் படம் வரைந்து விளையாடுவதற்கு கடிந்து கொள்ளும் அவர் தந்தை "இது உனக்கு சோறு போடாது" என ஒரு தந்தையின் ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்த போதும் அவரது கரங்கள் ஓவியத்தை கிறுக்குவதிலிருந்து ஓயவில்லை. இதுவே அவரை கலாபூஷணம் ஆக்கிவைக்குமென்று அவர் தந்தை அன்று அறிந்திருக்கவில்லை. தானே சுயமாக "கலாலயம்" என்னும் ஒரு ஸ்தாபனத்தை உருவாக்கி அதன் பெயரால் தனது கைப்பட வரைந்த வாழ்த்துத் தபாலட்டைகளைத் தயாரித்த பெருமைக்குரியவரே எங்கள் சரவணபவன்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தந்தையைப் போலவே சிறந்த சாரதி. காரோட்டுவதில் அவருக்கு நிகர் அவரே! முன் பின் போயிராத மலைநாட்டில் பிரயாணம் செய்யும் போது கூட மலைகளைச் சுற்றி வரும் ஒட்டுப்பாதைகளிலும், 'தாட்டவங்கு' எனும் 18 வளைவுகளைக் கொண்ட மலையுச்சியிலிருந்து மலையைச் சுற்றி சடுதியாகக் கீழிறங்கும் பாதையிலும் சாமர்த்தியமாக காரோட்டி எங்களைப் பயமின்றிப் பயணிக்கவைப்பவன் எம் பவன் என்று அவர் சகோதரி பெருமையாய்க் கூறுவதைக் காது குளிர கேட்டிருக்கிறேன். சிறு வயதிலிருந்தே ஜீவகாருண்யம் மிக்கவராதலால் வீதியோரமாய் அடிபட்டு உயிருக்குப் போராடும் பிராணிகளிற்குக்கூட நேரத்தைப் பொருட்படுத்தாது முதலுதவிகள் அளித்து மறுவாழ்வளிப்பவர். புகைப்பதைத் தவிர வேறெந்த தீயபழக்கங்களும் கிடையாது. ஓவியங்களை அவரது இடதுகரம் வரையும் போது, ஆறாம் விரலாய் அவரது வலதுகரத்தில் பீடி அல்லது சிகரட் சங்கிலித்தொடராய்ப் புகைந்து கொண்டு இருப்பது தான் இயல்பு.

இயல்பாகவே ஓவியக்கலையில் ஆர்வமாக இருந்த இந்த ஓவியனுக்கு அதன் நுட்பங்களை சொல்லிக் கொடுத்து, அவர் திறமையை வளர்த்து, உயிரோட்டமான ஓவியங்களைத் திறம்பட வரைவதில் பெரும்பங்கு வகித்தவர். தமிழகப் பிரபல ஓவியர் மாதவன் அவர்களின் சீடனான "பறாளை சிவசுப்பிரமணியக் குருக்கள்" அவர்கள். அவர் இல்லத்தில் ஒருவராக, அவர் உறவுகளில் ஒருவராக இருக்கவைத்து, அவர் வளர்த்து வைத்த இந்த ஓவியக்கலை தான் பிற்காலத்தில் சரவணபவனாருக்கு வாழ்வாதாரத் தொழிலாக அமையப்பெற்றது. ஓவியக்கலையின் கலாபூஷண விருதையும் 2012ல் பெற்றுத்தந்தது.

வானுறையும் தெய்வங்களை ஆலயச்சுவர்களிலும், திரைச்சீலைகளிலும் பதியவைத்து எமது கண்களுக்கருகில் காட்டியவர், பறாளை ஆலயச்சுவரில் கந்தரனுபூதியை எழுதியதே பவன் என நினைக்குமளவிற்கு மனதில் ஆழப் பதிந்து கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் மஹோற்சவ காலங்களில் ஏற்றப்படும் கொடிச்சீலைகளையும் திறம்பட வரைவதில் கைதேர்ந்தவர். விளம்பரப் பலகைகள், பதாகைகள் அனைத்தையும் நேர்த்தியாகச் செய்வதில் வல்லுனர். மூளாய் வைத்தியசாலையின் பெயர்ப்பலகை பலவருடங்களிற்குப் பின்னரும் அங்கு பவனது கைவண்ணத்தில் அழகாய் மிளிர்கின்றது.

இவரது தமிழ்ப்பற்றாலும், பொறுப்பற்ற இளவயது செயற்பாடுகளினாலும் இவரது தந்தையார் தன் மதிப்பிற்குரிய அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வரலாற்றின் நாயகன் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களிடம் இவரை அழைத்துவந்து சேர்ப்பித்திருந்தார். தனது தந்தையார் வைத்திருந்த மரியாதையைப் போலவே இவரும் அந்த எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்த பாசமும், நேசமும், மரியாதையும் கொண்டு பழகியவர். பழகப்பழக ஐயா அவர்களின் பாசம், தகுதி, தைரியம், தமிழ்ப்பற்று, அறநெறி நிற்கும் சுபாவம் எல்லாவற்றாலும் ஈர்க்கப்பட்டு, யாருக்கும் கீழேயிருந்து இரு நாட்கள் கூட கடக்க முடியாமல் மறுக்கும் இவர் குணமானது, ஆயுள் முழுவதும் தலைவா! என அவரை நெஞ்சில் சுமக்கும் மனமாக மாறிவிட்டது. அன்றிலிருந்து அவர் குடும்ப உறுப்பினருமாகி அவர் தேரோட்டும் சாரதியுமானார். அந்தக் காலங்களில் நடைபெற்ற தேர்தலின் போதெல்லாம் இலங்கையில் எங்கு இருந்தாலும், எந்த தடைகள் வந்தாலும் பவன் வாக்களிப்பைச் செய்யத் தவறியதில்லை. அவர் மானசீகத் தலைவன் மறைவிற்குப் பின்னர் நடைபெற்ற எந்த தேர்தலிலும் அவர் வாக்களித்ததுமில்லை.

தனது சகோதரர்களின் அளவிலா பாசமும் நேசமும் கொண்டு அவர்கள் குடும்பத்தில் ஒருவராகவும் நேசத்துடன் வாழ்ந்தவர். சகோதரர்களின் குழந்தைகளுடன் குழந்தையாய், சிறந்த வழிகாட்டியாய், நண்பனாய் வாழ்ந்து அனைவரது மனங்களிலும் மறையாமல் வாழ்பவர். அவர்களிற்காக பாடசாலை உபகரணங்களையும், கண்காட்சிப் பொருட்களையும் வடிவமைத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் ஓர் உன்னத படைப்பாளி. அவர் வடிவமைத்த பொருட்கள் யாவும் எப்போதும் முதலிடத்தைப் பெற்றுக்கொடுக்கத் தவறியதில்லை.

யாழ் இந்துக்கல்லூரிக் கண்காட்சியில் கணனி என்பது என்னவென்று அனைவரும் அறிந்திராத காலமதில் பிறந்த தேதியைச் சொன்னால் பிறந்த கிழமையை நொடியில் தெரிவிக்கும் கணனியை வடிவமைத்து காட்சிப்படுத்தியதில் அங்கு பயின்ற தனது மருமகன் நாராயண மூர்த்தியோடு தாய்மாமனான பவனிற்கும் பெரும் பங்கு உள்ளது பிரமிக்கத்தக்கது.


கம்பியூட்டர் நாராயணமூர்த்தி!

முருகனுக்கு ஆறுபடை வீடுபோல எங்கள் சரவணபவனாருக்கும் அவர் தன் படைவீடுகளான தன்னுடைய சகோதரர்கள் வீட்டிலும், தன் குரு கலைஞானி ஸ்ருடியோவிலும், மற்றொரு சீடனாக ஓவியக்குரு வீட்டிலும், தனது தலைவன் அமிர்தலிங்கம் வீட்டிலும், தொழினுட்பவியலாளராக தனது பெரியதந்தை செல்லையாவின் கராஜ்சுடன் அமைந்த வீட்டிலும் தனது வாழ்க்கையை மாறிமாறித் தொடர்ந்து வந்து 1984.08.29 அன்று நவாலி வாழ் மார்கண்டு செல்வரத்தினம் தம்பதியினரின் புதல்வி கமலாதேவியை மணமுடித்து நவாலியில் வந்து வாழத்தொடங்கினார். அவர்களது இல்லறத்தின் பேறாக ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையுமானார். தனது ஓவியக் குருவின் நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தந்தை வேதாரணியேஸ்வரக் குருக்களின் பெயரைத் தனது ஒரே மகளுக்கு 'வேதாரணி' எனச் சூட்டி தனது நன்றியை வெளிப்படுத்திக் கொண்டார்.

தன்னை நம்பித் தன் குடும்பம் உருவாகியுள்ளதன் விளைவாகப் பொறுப்புக்களை உணர்ந்து தன் மைத்துனரின் உதவியுடன் 1987ம் ஆண்டளவில் அரபு நாடொன்றில் (பாரின்) பணிக்கமர்த்தப்பட்டார். அந்நாட்டிலே (அந்த நாட்டு எழுத்துக்களில்) விளம்பரப்பலகைகள் எழுதுவதும் ஓவியங்கள் வரைந்து கொடுப்பதும் தான் அவரது தொழிலாகும். இலங்கையில் இருந்து அனுப்பப்படும் அவரது மகளின் படங்களை வைத்து, அதை அழகான ஓவியங்கள் ஆக்கி தனது அறையில் காட்சிப்படுத்துவது அவர் பொழுதுபோக்காகும். இலங்கையில் அதிகரித்த போர்ச்சூழல் காரணமாக, தன் குடும்பத்தை தனியே தவிக்கவிட மனமின்றி 1993ம் ஆண்டளவில் அனைத்தையும் நிறுத்திவிட்டு மறுபடியும் இலங்கைக்கு வந்து நவாலியொடு இணைந்து கொண்டார். 1995ல் விமானத்தாக்குதலும் இடப்பெயர்வும் வருமென்று அன்றே அறிந்திருப்பார் போலும். இடப்பெயர்வின்போது தனது உறவுகள், உடைமைகளை தவறவிட்டவர்கள் ஏராளம். அவ்வாறில்லாமல் 04 நாள் நடைப்பயணிப்பில் தனது மனைவி மகளுடன் மாமன் மாமி மைத்துனிகளையும், தங்கள் உடமைகளையும் "கோழி தனது குஞ்சுகளைப் பாதுகாப்பதைப் போல" அனைவரையும் பாதுகாத்து சேரவேண்டிய தாழையடியில் சேர்ப்பித்தவர். தன்னை நம்பி வருபவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கவேண்டும் என்பதே இவரது கொள்கையாகும். அதன்படி வாழ்ந்தும் காட்டியவர். அவரை அறிந்தவர்கள் நாடிவந்தால் மட்டும் இயந்திரங்களை பழுதுபார்க்கும் தொழினுட்பவியலாளராக உருமாற்றம் அடைவாரே தவிர விளம்பரப்பலகைகள் எழுதுவதும், கோபுர சிற்பங்களுக்கு வர்ணம் தீட்டுவதும், ஆலயச்சுவர்களில் உயிரோவியம் வரைவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிச்சீலைகள் கீறுவதும், நினைவஞ்சலி புகைப்படங்களை வரைந்து கொடுப்பதுமாக தனது பன்முகத் தொழிலை ஒருமுகமாக ஓவியனாய்ச் சுருக்கிக் கொண்டார். இருந்த போதிலும் பாடசாலை மாணவர்களிற்கும், ஆசிரியர்களிற்கும் ஊதியம் வாங்காமல் அக் கலையைச் சேவையாய் செய்துவந்தார். "கலையை விற்கக்கூடாது" என்று அவர் மனதில் ஆழப்பதிந்த கரு, அவர் உழைப்பிற்கேற்ற ஊதியம் வாங்குவதைத் தவிர்க்க வைத்தது. பணத்திற்கே முன்னுரிமை கொடுக்கும் இவ்வுலகிலே, பணத்தின் தேவையை நன்கறிந்தும், பணத்தில் பற்றின்றி வாழ்ந்த ஓர் அதிசயம் இவர். நவராத்திரி காலங்களில் நடுமூன்று நாட்களை விட மற்றைய நாட்களில் அதிக ஆர்வம் காட்டுவது நம்பமுடியாத உண்மை. கலைக்கும், தைரியத்திற்குமே முதலுரிமை கொடுப்பவர். கலைஞன் ஆயினும் மனிதாபிமானம் மிக்க பண்பாளன்.

அவர் வாழ்க்கை இளமையை விட்டு முதுமையை நாட ஆரம்பிக்கும் போதே தனது அலங்காரம், ஆடம்பரங்களைத் தவிர்த்து ஒரு கலைஞருக்குரிய பாணியில் உருமாறத் தொடங்கியிருந்தார். அவரது தாடி சிலசமயங்களில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரை நினைக்கவைக்கும்.

எண்ணற்ற தலைசிறந்த நூல்களை அடுக்கடுக்காய் அடுக்கி, அழகழகாய் காட்சிப்படுத்தி, வெளியே அமைதியாய் களையிழந்து காட்சியளிக்கும் ஒரு பழைய நூலகம் போலே, ஆயிரம் அபார திறமைகளை உள்ளே வைத்து தாடியும், பீடியுமாய் அமைதியாய் நடமாடிய ஒரு சரித்திரம் இவர்.

பொறுமைக்குப் பெயர்போன பூமாதேவி சில சமயங்களில் பொங்கியெழுவதுபோல் பொறுமையைக் கடைப்பிடிக்கும் இவர், சிலசமயங்களில் வெகுண்டெழுவதுமுண்டு. மனதில் பட்டவற்றையும், விமர்சனங்களையும் முகத்திற்கெதிரே சொல்லும் தைரியமும், முதுகிற்கு பின்னால் எந்த விடயங்களையும் பேச விரும்பாததும், மற்றவர்களைப் பேச விடாததுமான இவர் குணங்கள் பாராட்டப்பட வேண்டியன. வயது வித்தியாசமின்றி சிறியவர்கள் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளை தட்டிக்கொடுக்கும் இவர் பெரியவர்கள் செய்யும் தவறுகளையும் சுட்டிக்காட்டத் தயங்குவதில்லை.

ஏதாவது ஆக்கத்தைச் செய்து தருவதாக ஒப்பந்தம் செய்துவிட்ட பின்னர் அதற்கான முயற்சி எதுவுமின்றி ஓய்வில் இருப்பது போல பார்ப்பவர்க்கு தோன்றினாலும், அவரது மூளை அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதை யாரும் அறியார். "பூசலார் கட்டிய கோவில் போல" மனத்தினாலே அவ்வேலைகளை திருப்தியாக ஒழுங்குபடுத்தி வைத்த பின்னரே செயலிலே இறங்குவார் என்பது ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்த உண்மையாகும்.

இவ்வாறே கலைஞனாய் வாழ்ந்து 2016ல் தனது மகளுக்கு கொக்குவில் வாழ் மகாலிங்கம் இந்திராணி தம்பதியினரின் புத்திரன் மயூரனை மணமுடித்து வைத்து 2017ல் தனது பேரன் அக்ஷைதனையும் கண்டு மனநிறைவு கண்டார். மூப்பினாலும், தனது தொடர் புகைப்பிடிக்கும் பழக்கத்தினாலும் எட்டிப்பார்க்கும் சிறுசிறு நோய்களையெல்லாம் தன் மனவலிமையினால் துரத்தியடித்து தன் மனதளவில் ஆரோக்கியமாய் வாழ்ந்தவர். தனது பல் தொழில்களிற்கும் ஓய்வுகொடுத்து தன் பேரனின் மழலைமொழியிலும், குறும்பு விளையாட்டுக்களிலும், அவரையொத்த செயற்பாடுகளிலும் மனமகிழ்ந்து, அவனை மென்மேலும் ஊக்குவிப்பதில் முன்னிற்பவர். தனது முதுமையையும் பொருட்படுத்தாது தனது பேரக்குழந்தையுடன் குழந்தையாக விளையாடிக்களிப்பவர்.

சிலேடைப் பேச்சில் பவன் இன்னொரு கி.வா.ஜெ (தமிழறிஞர் கி.வா.ஜெகன்நாதன்). கடந்த ஆடி 14 அன்று அவரது பிறந்தநாளை முழுக்க முழுக்க அவர் பேரனின் ஆசைக்காக சிறிய அளவில் கொண்டாடி மகிழ்ந்திருந்தார். அதுதான் அவரின் இறுதிப் பிறந்தநாளென்று யாரும் அன்று அறிந்திருக்கவில்லை. அன்றைய தினம் அங்கு வந்து வாழ்த்துச் சொல்பவர்களிற்கு "இது ஹப்பி பேர்த்டேயா? இல்லை கப்பி பேர்த்டேயா? தெரியவில்லை" என அவர் பாணியில் இது கடைசிப் பிறந்தநாளா என்பதனை வினயமாக வினவியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.08.2021 அன்று மாலை வெளியில் செல்ல ஆயத்தமான தனது மகளையும் பேரனையும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்துவிட்டு, தனது ஆர்வத்திற்குரிய தொலைக்காட்சித் தொடரைப் பார்த்தபடியிந்து, மிகமிகச் சாதாரணமாக மனைவி கையால் ஆக்கிக்கொடுத்த சிற்றுண்டியை உண்டு, தண்ணீரையும் அருந்தி முடித்து நாற்காலியில் சாய்ந்து எந்தவித வேதனைகளுமின்றி கண்களை மூடி தூங்கியவாறு உணர்விழந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து வந்த 19 நாட்களும் உணர்விழந்த நிலையிலும் தனது மூச்சை இழுத்துப்பிடித்து வைத்திருந்து, தனது தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் பிறந்ததினமான 26.08.2021 அன்று தன்னுயிரை நீத்தார்.


"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவன் பவன். அவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்" என்பதற்கேற்ப வானுறைத்தருள்தரும் எங்கள் அந்திரான் பதிவாழ் சரவணபவன், வருடாவருடம் சரவணபவனால் தனது கொடிச்சீலையில் உருவாக்கி, கொடிமர உச்சிக்கு மேலெழுந்து பறக்கும் மஞ்ஞையும் குக்குடமும் வழிகாட்ட, மண்ணில் வாழ்ந்த எங்கள் சரவணபவனைத் தன்னோடு அழைத்துக்கொண்டு, அவர் நினைவுகளை மட்டும் எம்மில் மீட்டிக்கொள்ள மணிக்கொருமுறை "ஓம் சரவணபவ" என்று ஒலிக்க வைத்துக்கொண்டிருக்கிறார் என மனதைத் தேற்றி, எங்கள் சரவணபவனின் ஆத்மா அந்த சண்முகன் பாதங்களில் அமைதிபெற இறைவனைப் பிரார்த்திப்போம்.

**"சரணம் சரணம் சரவணபவ ஓம்**
**சரணம் சரணம் சண்முகா சரணம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வ ஒளி அவன் தான் சரவணபவன்.....

மண்ணுலகில் பிறந்தவர்கள் யாவரும் ஒரு நாள் விண்ணுலகம் போக வேண்டும் என்பது தான் நியதி மானிடப்பிறவி எடுப்பதென்பது மிகவும் அரிது. இதைத் தான் அரிது அரிது மானிடராவது அரிது என்று ஔவையார் கூறினார். மனிதப்பிறவியின் நோக்கம் மற்ற உயிர்களிற்கு உதவுவது ஆகும். இவ் வரையறைக்கமைய சரவணபவன் தனக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்த ஒரு தெய்வப்பிறவி. பவன் நவாலி மண்ணுக்கு மணமுடித்து வரமுன்பே பவனை நன்கு அறிவோம். அன்பும், பண்பும், அறிவு அடக்கமும் கொண்ட பல்தொழில் விற்பன்னன்.

ஓவியர் பவனென்றால் ஓவியத்தைப் பார்க்கவே தேவையில்லை. நாம் எதிர்பார்த்ததை விட மிகவும் அழகாகவும் அருமையாகவும் இருக்கும். ஆலயங்களில் இருக்கும் திரைச்சீலைகள், ஆலயச்சுவரில் வரையப்படும் திருவிளையாடற் படங்கள், அது மட்டுமின்றி ஆலயச் சுவர்களில் எழுதப்படும் திருமுறைகள் என்று பலவற்றை சொல்லிக்கொண்டே போகலாம். இவை மட்டுமன்றி ஆலய வாகனங்களிற்கான வர்ணவேலைகள், கொடிச்சீலை கீறுதல் என்று பலவகையான கைவண்ணம் கொண்டவர். மஹோற்சவ காலங்களில் ஏற்றப்படுகின்ற கொடிச்சீலை கீறுவதில் தனது குருநாதர் பறாளை சிவசுப்பிரமணியக் குருக்களிற்கு ஈடுகொடுக்கக்கூடிய ஒரு கலைஞன்.

கலாபூஷணம் சரவணபவன் வீணை, ஹார்மோனியம் போன்ற வாத்தியக் கருவிகளை வாசிப்பதிலும் வல்லவர். அதனை விட புகைப்படம் எடுப்பதில் கை தேர்ந்தவர். எடுத்த புகைப்படங்களை மெருகூட்டும் பல வித்தைகளை கைக் கொண்டவர். இவை மட்டுமா வாகனங்கள் (கார், மோட்டார் சைக்கிள்) திருத்துவதில் கை தேர்ந்த பொறியியலாளர். எந்த வேலையானாலும் முகம் சுழிக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர். யார் எதைக் கேட்டாலும் மறுக்காமல் செய்யும் செயல் வீரன். இன்பத்திலும், துன்பத்திலும் என்றுமே துணை நிற்பவர். ஈடற்ற செயல்வீரன், நிகரற்ற ஓவியர், இணையற்ற பொறியியலாளர், தன்னிகரில்லா இசையாளன், இவ்வாறாக யாவருக்கும் உறுதுணை செய்யும் சர்வஒளி மிக்க சரவணபவனின் ஆத்மா அந்திரான் பாதம் அடைய பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

***பிரம்மஸ்ரீ கௌரீஸ்வரக்குருக்கள்,(அவுஸ்ரேலியா)***
***பிரதிஸ்ரா கலாபூஷணம்***
***நவாலி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dr. அமிர்தலிங்கம் பகீரதனுடன் அவரும் மருமகனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை
**Amirthalingam Memorial Foundation**
58, Seymour Avenue, East Ewell,
Surrey KT17 2RR, UK
E-mail: amfs1927@gmail.com Web: www.amirthalingam.com

# பவன் அண்ணா

## (கலாபூஷணம் கந்தையா சரவணபவன்)

60களின் கடைசியில் அந்த இளைஞனை அழைத்தபடி அவருடைய தந்தை அந்த தொகுதி பாராளுமன்ற உறுப்பினரிடம் வருகிறார். "ஐயா, இவன் கல்வியை முடித்துவிட்டான். உங்களுடன் இருக்கட்டும். பார்த்துக் கொள்ளுங்கள்" என கூறியபடி அறிமுகப்படுத்துகிறார். அன்று ஆரம்பித்த அந்த உறவு வீட்டில் எல்லா நல்லது கெட்டதுகளிலும் கலந்துகொண்டு ஒரு மூத்த மகனாக அந்த பாராளுமன்ற உறுப்பினரை தனது தந்தையார் போலவே ஐயா என அழைத்தவண்ணம் அந்த வீட்டில் வலம் வந்தார். எனது தந்தை அமிர்தலிங்கம் தான் அந்த பாராளுமன்ற உறுப்பினர். அவருடன் அன்று ஏற்படுத்திய நேசமும் பக்தியும் என்றுமே பவன் அண்ணனை விட்டு அகலவில்லை. எமது தாயாரை அக்கா என விழித்து, அவருக்கு ஒரு மகனாக வாழ்ந்தவர் அவர். எமக்கு ஒரு உடன்பிறவா சகோதரன்.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து அவரை பவன் அண்ணா என அழைத்து வாழ்ந்திருக்கிறேன். அவர் எனது தந்தையாருக்கு வாகனசாரதியாய் மட்டும் இருக்கவில்லை. அவரது பாதுகாவலராகவும் நலன்விரும்பியாகவும் வாழ்ந்திருக்கிறார்.

காரில் தூர பயணம் செல்ல வேண்டுமா, அவர் எங்களுடன் பயணிப்பார். வழியில் எமக்கு கதைகள் சொல்வார். தனது திறமையால் எம்மையெல்லாம் மகிழ்விப்பார். ஒரு நீள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கட்டியை எடுத்து ஒரு குண்டூசி கொண்டு அதற்கு உயிர்கொடுத்து, ஒரு தடியுடன் நடக்கும் காந்தித் தாத்தாவை உருவாக்கித் தருவார். அன்றைய காலத்திலிருந்து அடிப்படைப் புகைப்படக் கமராவைக் கொண்டு ஒரே பிரேமில் இரு படங்களைக் கிளிக் செய்து தருவார். இன்னமும் கொழும்பில் மிருகக்காட்சிச்சாலையில் பவன் அண்ணா எடுத்த படங்கள், ஒரே படத்தில் இரண்டு எனதுருவம் இன்னும் நினைவில் இருக்கிறது. தொழினுட்பத்துறையில் இவர் ஒரு சுயம்பு.

எந்த விதமான தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, ஒலி ஒளிக் கருவிகளையும் தானே திறமையாகத் திருத்தும் திறமையிருந்தது. ஒரு துப்பாக்கியைத் திருத்திக் கொடுத்ததற்காக 70களில் கைது செய்யப்பட்டு சித்திரவதை அனுபவித்து சிறைச்சாலையில் வாடினார். தன்னால் முடிந்த பங்கை உரிமைப் போராட்டத்திற்கு வழங்கினார். அவரது கையிலிருந்த திறமையினால், தூரிகையில் அவர் வரைந்த ஓவியங்கள் எண்ணில் அடங்காதவை அவருடைய சித்திரத்துறையின் திறமையைப் பாராட்டி அவருக்கு கலாபூஷணம் பட்டம் வழங்கப்பட்டது. இதைவிட நாடகத்துறையிலும் தனது முத்திரையைப் பதித்தவராவார். பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் திருவிழாவில் அவர் கர்ணனாக வேடமிட்டு நடித்தது நிஜகர்ணனையே எம் கண்முன்னால் கொண்டுவந்தது. அந்தளவு தத்ரூபமான நடிப்பு அவருடையது. அன்பையும் பண்பையும் தன்னகத்தே கொண்ட அன்னார் திருமணமாகி ஒரு பெண்பிள்ளைக்குத் தந்தையானார். யுத்தம் முடிந்து 2011ல் இருபத்திரண்டு வருட அஞ்ஞாத வாசத்தின் பின்னர் நாங்கள் இலங்கை திரும்பியபோது வயதில் முதிர்ந்த ஒரு அன்பான கணவனாகவும் பாசமிகு தந்தையாகவும் அவரைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணம் செல்லும் போதெல்லாம் அவரைக்கண்டு அளவளாவி மகிழ்ந்திருக்கிறேன். எம் மீதும், எமது குடும்பத்தின் மீதும், குறிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தந்தை மீதும் மாளாத பாசம் வைத்திருந்த அவர் தனது அன்பு மனைவியையும், அருமை மகளையும் பெயர் சொல்ல வந்த தனது பேரனையும் பிரிந்து எல்லோரையும் தவிக்க விட்டு மறைந்த செய்தியைக் கேட்டபோது இதயத்தில் ஒரு வெறுமை ஏற்பட்டது இனி அந்த அன்பு சகோதரனைப் பார்க்கமுடியாது என உணரும் போது ஏற்படும் தவிப்பை எப்படி எழுத்தில் கூறமுடியும்? கடைசியாக தொல்புரத்தில் அவர்கள் குடும்பகோவில் விழாவில் மூர்த்தி அண்ணனுடனும் ஏனைய உறவினர்களுடனும் மகிழ்ந்திருந்தது தான் அவரை நான் காணும் கடைசி சந்தர்ப்பம் என அன்று அறிந்திருக்கவில்லை.

அன்னாரின் மறைவின் பின்னர் அவர் மகளுடன் பேசியபோது அறிந்த ஓர் செய்தி என் நெஞ்சை வெகுவாகப் பாதித்தது. பவன் அண்ணா அவர்கள் எனது தந்தையின் மறைவின் பின்னர் எந்த தேர்தலிலும் வாக்களிக்கவில்லை என்பது தான். எனது தலைவன் உண்மையாக மக்களுக்காகவும் விடுதலைக்காகவும் உழைத்த நேர்மையானவர். அவரைப் போல் ஒருவர் இனிவரமுடியாது என அடிக்கடி கூறுவாராம். அப்படி ஒரு தலைவர் வருங்காலத்தில் உருவாக்குவதற்காக வாக்களிக்க வேண்டியது தானே எனக் கேட்டால் அப்படி ஒரு தலைவன் இனித் தோன்றவே முடியாது என்பாராம். இந்த நினைவுகள் கண்களை குளமாக்க நிரந்தரமான பிரியாவிடையையும், வணக்கத்தையும் எமது அன்பிற்குரிய பவன் அண்ணாவுக்கு செலுத்துகிறேன். “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்ற வள்ளுவன் வாக்குக்கமைய அவர் ஒரு உன்னதமான இன்பத்தை அடைந்துவிட்டார் என இறைவனுக்கு நன்றிகூறி ஆறுதல் அடைவதைத் தவிர வேறென்ன வழி?

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

*அன்புடன்*

***Dr.அமிர்தலிங்கம் பகீரதன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலை வித்தகர் சரவணபவன்.....

'பவன்' என எல்லோராலும் அழைக்கப்பட்ட சரவணபவன் பறாளையில் எமது தந்தையாரிடம் சீடன் ஆகவும் குடும்பத்தாரோடு உடன்பிறந்த ஒருவராகவும் வாழ்ந்த காலம் நினைவலைகளில் மேல் எழுகின்றது.

எப்பணியானாலும் அப்பணியை தன் திறமையினால் செவ்வனே செய்து பாராட்டுக்களைப் பெறுபவர். தந்தையாருக்கு ஓவிய பணியில் வலதுகரமாகத் திகழ்ந்து தனது தனித்துவத்தையும் வெளிக்கொணர்ந்த மேதை. பற்பல கோவில் வாகனங்களை வர்ணம் பூசி மெருகேற்றி புதிய பொலிவுடன் மிளிர வைத்தவர். குறிப்பறிந்து செயலாற்றும் திறமை படைத்தவர். ஓவியம், சிற்பக்கலை மட்டுமல்ல இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் பற்றிய நுண்ணறிவும், அவற்றை சீரமைப்பதிலும் வல்லுனர். இயல் இசை நாடகம் என்று பன்முகத்திறமையைக் கண்டு வியந்து உயர்ந்தவர்கள் பலபேர் அதன் தாக்கம் என்னிடமும் உண்டு. கலைஞர்களுக்குரிய தாமதம் சிறிது இருந்தாலும் தனித்தன்மையுடன் ஏற்ற பணியை குறைவின்றி செய்து முடிக்கும் வித்தகர். அவரது வெற்றிடத்தை நிரப்புவது கடினம். எப்பொழுதும் புன்னகை தவழும் அவரது சாந்தமுகம் அனைவருடனும் அன்பாக பேசி மகிழும் பாங்கும், ஓடி வந்து உதவும் தன்மையும் நினைவினில் நிலைத்து நிற்கும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய வாழ்ந்து இறையடி எய்தியவர். தாழம் பூ வாடி வதங்கினாலும் அது இருந்த இடம்மட்டுமல்ல எங்கெங்கும் தனது நறுமணத்தைப் பரப்புவது போல் அவர் எம்மிடையே இல்லாவிடனும் அவர் புகழ் தரணியில் என்றும் நிலைத்து நிற்கும்.

*அன்புடன்,*

*பாலகுமார் ஐயா,*

*ஸ்ரீலோகேஸ் இன்டர்நஷனல், சென்னை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரவணபவன் எனும் திருமந்திரம்

"பவா மாமா'' அல்லது பப்பி மாமாவை இனிமேல் காணமுடியாது என்ற யதார்த்தம் மனதில் உறைக்க உறைக்க கண்கள் கலங்குகின்றன. எதை எழுதுவது, எதை விடுவது. எனது அம்மாவின் சகோதரர்கள் மூவரும் என் வாழ்வில் மிகவும் காத்திரமான பங்களிப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள். மூத்தவரைப் பார்த்துத்தான் "உலக விடயங்களை அணுகுவதற்கு ஏற்ற ஞானத்தை நானும் பெறவேண்டும்" என்ற பேரார்வம் என்னுள் துளிர்விட்டது. "இளையவர்" இந்த உலகத்தை வேடிக்கையாக அணுகுவதைச் சொல்லித் தந்தார். இவர்களுக்கு "நடுவான்" தான் பவா மாமா - மற்ற இருவரையும்விட முற்றிலும் மாறுபட்டவர். "உலகம் ஞானம் மிகுந்திருந்தாலென்ன உலகம் வேடிக்கையாக இருந்தாலென்ன அதிலிருக்கும் ஜனரஞ்சகத்தன்மையை நாம் உபாசிக்க வேண்டும்" என்பதை பவா மாமாவிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன்.

அவரை நான் வேடிக்கையாக "டேய் நைனா" என்று அழைப்பதுண்டு. அவரும் என்னை "நைனா" என்பார். என்னைவிட பல வயதுகள் மூத்தவர் அவர். ஆனால் மருமகனான நான் தன்னை வாடா போடா என்று அழைக்கும் அளவிற்கு என்னை ஏற்றுக் கொண்டார். அது எப்படி? அதுதான் பப்பி.

"பப்பி'' எங்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்குமே செல்லப்பிள்ளையாக இருந்தாலும், "எடுப்பார் கைப் பிள்ளையாக" என்றும் இருந்திருந்ததில்லை.எந்த சிக்கலான நிலை வரினும் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அனைவரையும் அனுசரித்துச் செல்வார். ஆனால் எப்போதாவது "சுருக்" எனக் கோபமும் வரும். சிலருக்கு எதிர்பாராத நேரத்தில் பளீரென தனது இடது கையால் அறை கொடுத்ததும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70களில் மூளாயில் விசாகவாசத்தில் நாம் வசித்த காலப்பகுதியில் எனக்கு "நண்பன்", "மந்திரி", "நல்லாசிரியன்" என்று தோன்றும் அளவிற்கு தோழனாக இருந்தார். என் வீட்டாருக்குத் தெரியாமல் ரகசியமாக இரவில் யாழ்ப்பாணத்திற்கு சைக்கிளில் செல்வோம். காற்றடிக்கும் திசையை கவனத்தில் வைத்து எந்த ரோட்டால் போகவேண்டும், எந்த ரோட்டால் வரவேண்டும் என்பதெல்லாம் அவர் சொல்லிவிடுவார். "டபிள்ஸ்" உட்கார்ந்தவாறு சைக்கிள் பறக்கும். (சிலவேளைகளில் நான் சைக்களை உழக்கவேண்டும், சில வேளைகளில் அவர் உழக்குவார். இருவருமே டபிள் பெடல் போடுவோம்) அந்த நாட்களில் நடு இரவில் கல்லுண்டாய் வெளியில் எமது சைக்கிள் மட்டும் தனியாக வந்துகொண்டிருக்கும். பாதுகாப்பு முன்னேற்பாடாக அது ஆனைக்கோட்டை போலீஸ் ஸ்டேஷன், சங்கானை போலீஸ் ஸ்டேசன் முன்னால் போகாமல் குறுக்குப்பாதை பிடிக்கும் - தேத்தண்ணிக் கடை திறந்திருந்தால் நின்றுவிடும்.

பீடியும், சிகரெட்டும், பிளேன் டீயும்தான் இவரது பிரிய உணவு. ஏறக்குறைய ஆள் ஒரு "செயின் ஸ்மோக்கர்" என்பதால் பதின்ம வயதான நான் இவரோடு சுற்றியடிப்பதை வைத்து நானும் ஒரு "ஸ்மோக்கர்" ஆகியிருப்பேன் என்றே பலரும் நினைத்தார்கள். ஆனால் நான் இதுவரை வாழ்க்கையில் ஒருமுறைகூட புகைத்ததில்லை. காரணம் "டேய் நீ இதை மட்டும் பழகிடாதயாடா.." என்று அவர் சொல்வதால்தான்.

பப்பி மாமா பெரியவர்களிடம் பெருமரியாதை காட்டுவார். சிறியவர்களிடம் வயது வித்தியாசம் இல்லாமல் நட்பு கொள்வார். அழகான பெண்களிடம் சகோதரத்துவக் காதல் கொள்வதும் உண்டு. இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் அவரது உடல்மொழி மூன்றுவித சிவாஜி கணேசன்களாக மாறியிருக்கும். உண்மையில் அவரது நடை பாவனை இரண்டும் அப்படியே சிவாஜி கணேசனிடம் இருந்து கொப்பியடித்ததுபோல இருப்பதை நான் மட்டுமல்ல அனைவரும் சிலாகித்து ரசிப்பார்கள். ஐ மிஸ் யூ பப்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியன், சிற்பி, புகைப்படக்கலைஞன், நடிகன், வடிவமைப்பாளன், தொழில் நுட்பவியலாளன் என எத்தனை முகங்கள் அவருக்கு.... கொம்பியூட்டர் என்ற பெயரில் நாம் உருவாக்கிய ஒரு கருவியின் "கேஸிங்" ஆகட்டும், ட்ரான்ஸிஸ்டர் ரேடியோவிற்கு சிறிய பற்றரி கிடைக்காமல் திணறிய கன்ரீன்காரிக்கு அவர் செய்து அன்பளித்த பெரிய பற்றரி வைக்கும் மின்கலப் பேழையாகட்டும் ஒரு தேர்ந்த டிசைனருக்கு உரிய செய்நேர்த்தி அவருக்குக் கைவந்த கலை.

ஓவியம் குறித்துச் சொல்லவே வேண்டாம். "பணக்காரக் குடும்பம்" படத்திற்கான விளம்பரத்திற்கு மோட்டார் சைக்கிளோடு நிற்கும் எம்ஜியாரை விளம்பர ஓவியமாக வரைந்து வைத்திருந்தார். அதுதான் அவர் வரைந்து நான் பார்த்த முதலாவது உயிரோவியம். எம்ஜியாரும் சிவாஜியும் ஒரே மேசையில் அமர்ந்து தேத்தண்ணி குடிப்பதுபோல கற்பனையாக ஏதோ ஒரு தேத்தண்ணிக் கடைக்காக வரைந்து கொடுத்திருந்தார். சந்திரன் வீட்டில் உயிரோவியமாக "செல்லையா" நின்று கொண்டிருப்பார். இவற்றைவிட ஏராளமான தெய்வ உருவங்கள். அவை மட்டுமா... பப்பியின் கை வண்ணம் தொழில் நுட்பத்திலும் புகுந்து விளையாடும். பழுதாகிப்போன கார், கிராமபோன், டேப் ரெகோர்டர், கமெரா என எதிலும் கைவைப்பார். திருத்திவிடுவார். இவை மட்டுமா... ஒருமுறை கைத்துப்பாக்கியைக்கூட கழற்றி சேர்விஸ் செய்த கில்லாடி அவர்.

சிவாஜி கணேசனின் "பராசக்தி", "சாம்ராட் அசோன்", "சேரன் செங்குட்டுவன்", "சோக்கிரடீஸ்", "வீர சிவாஜி" வசனங்களை அப்படியே மனப்பாடமாகப் பேசுவார். நடிகன் அவர். (ஆனால் வாழ்க்கையில் நடிக்கமாட்டார்.) ஒருவேளை "கந்தையாண்ணை" ஊக்குவித்திருந்தால் அல்லது "சரவணபவன்" தனக்கான சரியான சந்தர்ப்பங்களை அமைத்திருந்தால் இலங்கை போற்றும் ஒரு சிறப்பான நடிகராக அவர் திகழ்ந்திருப்பார்.

எனக்கு விபரம் தெரிந்த நாட்களிலிருந்து அவரை நடிகனாக நன்கு ரசித்திருக்கிறேன் என்பதை தற்போது உணர்கிறேன். ஆள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும்போதும் சிவாஜி, நிற்கும்போதும் சிவாஜி, குதூகலிக்கும்போதும் சிவாஜி. அழுது நான் பார்த்ததில்லை. நான் குழந்தை தாண்டிய பருவத்தை அடைந்த காலங்களில் இவர் ''ஈனா மீனா டீக்கா...'' என்று பாடி கோணங்கியாக ஆடிக்கொண்டிருக்கும் ஒரு பிம்பம் இன்றும் நினைவில் இருக்கிறது. "மீண்ட பாசம்" நாடகத்தில் அவர் நடித்ததும் கலங்கலாக நினைவில் இருக்கிறது. 70 களில் "குந்தியின் செல்வன்" நாடகத்தில் அப்பாவின் பாடல்களைப் பாடி, ஒரு கர்ணனாக "அம்மா." என அடிவயிற்றிலிருந்து ஒரு குரல் வருமே..

ஒருமுறை ஏதோ ஒரு ஆங்கிலப்படத்தை என் வீட்டுக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாக செக்கன்ட் ஷோ பார்த்துவிட்டு, வீடு திரும்ப வேண்டும். சைக்கிளை உழக்கிச் செல்வதற்கு "பெற்றோல்'' வேண்டுமல்லவா.. ஹோட்டல் பரடைஸில் ப்ளேன் டீயும், வடையும் சாப்பிட உட்கார்ந்திருந்தோம். எமதருகில் இரண்டுபேர் உட்கார்ந்திருந்தார்கள். அதில் ஒருவரை உற்றுப்பார்த்த பப்பி அவரிடம் சென்று "நீங்க மனோகரன்.. இல்லையா..?" என விசாரிக்கிறார். அது பொப்பிசைச் சக்கரவர்த்தி ஏ.ஈ. மனோகரன்! அருகில் இருந்தவர் "இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு'' கே.எஸ்.ராஜா!! பப்பியும் ஏ.ஈ.மனோகரனும் ஏதோ ஒரு திரைப்படத்தில் நடிப்பதற்காக மேக்கப் டெஸ்டிற்காக போன இடத்தில் சந்தித்திருக்கிறார்கள். பப்பியை அடையாளம் கண்ட ஏ.ஈ.மனோகரன் கட்டித் தழுவி.. ஒரு பெருநடிகருக்குரிய பந்தாவுடன் அன்று பப்பி பேசிக்கொண்டிருந்ததை கவனித்து மனதில் பதித்துக் கொண்டேன். (திருட்டுத்தனமாக படத்திற்கு போனதால் இந்த சந்திப்பு பற்றி யாருக்கும் சொல்ல முடியாமல் நானும் பப்பியும் திணறியது தனிக்கதை) பின்னர் சிங்கப்பூரில் நான் ஏ.ஈ.மனோகரனோடு பேசிக்கொண்டிருந்தபோது "உங்களோடு படம் நடிக்க மூளாயிலிருந்து இன்ரெவியூவுக்கு வந்த ஒருவரின் மருமகன் நான்" என்றேன். "ஓ... அப்பிடியா ஸார்.... யார் உங்க மாமா? பெயர்?" என்று கேட்டார் மனோகரன். ''பவன்" என்றேன்.. "ஓம்.. ஓம்.. ஷர்வணபவான்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் சொல்லி ஞாபகப்படுத்திக் கொண்டார். அந்த அளவிற்கு பப்பியின் வீச்சு இருந்திருக்கிறது.

70களில் ஒரு தீவிரவாத அரசியல் கொலை நடந்த பின்னர் இவரையும் உள்ளே போட்டுவிட்டார்கள். ஆள் விடுதலையாகி வெளியே வந்த பின்னர் பலரும் என்னிடம் "இவரோடு திரிந்தால் ஆபத்து" என்பார்கள். "அமிர் இருக்கப் பயமேன்" என்று சொல்லி சுற்றித் திரிவோம். அமிர்தலிங்கம் "எள்" என்றால் எண்ணையாக நிற்கும் காரணத்தால் அந்நாளில் தம்பி போல - அமிர்தலிங்கம் அவர்களின் மிகப்பெரும் பிரியத்திற்குரியவராக பப்பி இருந்தார். (தான் நேசித்த அமிரின் பிறந்த தினத்தன்று இவர் மறைந்திருக்கிறார்.) அமிரின் கொலையை ஏற்க முடியாதவராக பப்பி துடிப்பார். . விளைவுகளை கவனத்தில் எடுக்காத அரசியல் விமர்சகர் அவர். அவரது விமர்சனங்கள் பலவும் திருமந்திரம் போல இருக்கும். ஒருமுறை சந்திரனிடம் இரவல்பெற்ற "மோபெட்டில்" மூளாய் நோக்கி ஆங்காங்கே செக்கிங்குகள் தாண்டி போய்க்கொண்டிருந்தோம். "பத்தைக்குள்ள நிண்டதுகளக் கொணந்து முற்றத்தில விட்டாச்சு.." என்றார். ஒரு வரி விமர்சனம்.

அவருக்கு மனைவியாக வாய்த்தது ஒரு பாரதி செல்லம்மா. உவரிட்ட சொல்லுங்கோ என்று அவர் புகார் செய்யும் போது பப்பி கூச்சம் வந்ததுபோல நடிக்கும். அக்ஷையின் தாத்தா. மயூரனின் மாமனார். ஒவ்வொரு முறையும் தாரணி அப்பா என்று உருகும்போது எட எங்கட பப்பியா இப்படி ஒரு பொறுப்பான அப்பாவாக மாமனாராக தாத்தாவாக இருந்திருக்கிறார் என்று நினைத்துக்கொள்வேன். பப்பியின் மறைவால் அவர்கள் நால்வரும் காணும் வெற்றிடம் அளக்க முடியாதது அவர்களுக்கு மட்டுமா கனடாவில் இருந்து நான் எப்போதும் யாழ்ப்பாணம் வந்தாலும் பப்பி எனக்காக அதிகாலை யாழ் பஸ்ரான்டில் காத்திருந்து இருவருமாக பிளேன்ரி குடித்து.....

டேய் நைனா.... டேய் பப்பியா.... திரும்பவும் வாடா.

*மருமகன் - கனடா மூர்த்தி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த நினைவுகள்

சாதனை மன்னன் சரவணபவனின் நண்பனாகிய என் நெஞ்சிலே நீங்காமல் வீற்றிருக்கும் உன் சாதனைகளை ஊர் அறிந்திருக்கலாம், உலகமே அறியவேண்டி உங்களுடன் பகிர்ந்துகொள்ள அவாக்கொண்டேன்.

1. அந்திரான் முருகமூர்த்திகோவில் முகப்பில் வள்ளி தெய்வானை வடிவேலனின் வர்ணச்சித்திரம்.
2. அனலைதீவு கோட்டைப்பிள்ளையார் ஆலயத்தின் வசந்த மண்டப திரைச்சீலை, அண்ணன் கணேசனும் தம்பி பாலமுருகனும் பொதிந்த வர்ணச்சித்திரம், புலம்பெயர் நாட்டிலிருந்து கும்பாபிஷேகத்திற்கு வந்தவர்களின் வியப்பு மேலீட்டால் 100 டொலர் பரிசாகப் பெற்றமை.
3. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் விலாச எழுத்து அவருடைய கற்பனையில் உதித்த உலகில் எங்குமே காணமுடியாத சாதனை எழுத்து.
4. பொன்னாலை வரதராஜப்பெருமாளின் தசாவதாரச் சிற்பம், பெருமாளின் கடைசிக் கும்பாபிஷேகத்தின் போது 110 அடி ராஜகோபுர வர்ணவேலையின்போது பல இளைஞர்கள் ஏறப்பயந்து மலைத்து நிற்க என்னுடன் மின்னல் வேகத்தில் ஏறி உச்சியை அடைந்து குறித்த நல்லநேரத்தில் வர்ணக் கலவையைப் பூசிச் சாதனை படைத்தது.
5. எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்ததுபோல் யாழ் இந்துக் கல்லூரியில் பயின்ற தன் அக்காவின் மகனுக்கு பொருட்காட்சியில் காட்சிப்படுத்த கணக்குக்கூட்டும் இயத்திரத்தை வடிவமைத்துக் கொடுத்து பாடசாலை சமூகத்தின் பாராட்டைப் பெற்று அவர்களின் வேண்டுகோளின்படி பாடசாலைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட சாதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை மன்னன் சரவணபவனின் சாதனைகளில் ஒரு சிலவே இவை. மேலும் எழுதப்போனால் இந்த மலரே போதாது. நடிகனாய், சித்திரக் கலைஞனாய், வர்ணக்கலவையில் மன்னனாய், ஓர் மின்னியலாளனாய் சாதனை படைத்த உன்னை என் நெஞ்சிருக்கும் வரை நினைவாக நிறையும்.

*உன் நினைவுகளைச் சுமந்து நிற்கும்*

*செ. தேவதாசன்.*

## நுண்மைமிகு சகலகலாவல்லவன் கலாபூஷணம் கந்தையா சரவணபவன்

சகல கலைகளிலும் வல்லவரான மாமேதை ஓவியர் அமரர் கந்தையா சரவணபவன் அவர்களிடம் காணப்படும் வித்துவமானது இவருக்கு இது ஒரு தானாய் வந்த சந்தனமல்ல. ஒருபுறம் தாய் வழிப் பேரன் கலாவித்தகர், காரைநகர் அண்ணாவியார் கணபதியாரிடமிருந்து கிடைக்கப்பெற்ற வித்துவம் என்று சொல்லலாம்.

மறுபுறம் தொல்புரப்பதியின் மிகமூத்த சம்டம்பியாரான கலைமேதை PAPK நாராணச்சட்டம்பியார் அவர்கள் தொல்புரம் ஆதிமுத்து மாரியம்மன் ஆலயத்தையும்,

பட்டரோடழகா உயர் பரிவுடையர் கார்கேயர்
பட்டங்கட்டி வளவினுயர் சட்டம் நாராணா
பட்டாசைகள் சாற்றிப் பாமாலைகள் பாடிக்
கொட்டாரமதில் வைத்தார் கொட்டடியம் பதி தாயை

S.J வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் அவர்கள் தொல்புரம் அ.மி.த.க பாடசாலையையும் நிர்மாணித்ததாகவும் இவ்விருவரும் கலைத்துறையில் நெருங்கிவர்களாகவும் காவடி, கரகம், கூத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலவாத்திய ரசனை இவைகளில் வித்துவம் மிக்கவர்களாகவும், தம்மோடு நின்றுவிடாது வாரிசுகளை மலேசியா சென்று தந்தை S.J.V செல்வநாயகத்தைப் பெற்றெடுத்ததாகவும் இவ்வாதார்பூர்வ அடிப்படையில் அமரர் சரவணபவன் அவர்கள் சட்டம்பி நாராயணரின் பூட்டனாய்த் தனது மாதா பிதாவினரின் பரம்பரை வழிவந்த சகலகலா வித்துவங்களைப் பெற்றுள்ளார். பரம்பரைப் பாரம்பரியங்களில் இவர் வளர்ந்து அமரத்துவம் எய்தியமை ஒரு புகழ்பூத்த இழப்பாகும்.

இவரது தந்தையார் கலைஞர் கந்தையா பெரிய தந்தையார் இசைவேந்தன் செல்லையா போன்றவர்கள் இவை வாத்தியங்களில் பல அரங்குகளைக் கையாண்ட வித்துவம் மிக்கவர்கள். ஒலி, ஒளி அரங்க ஒப்பனைகளையும் இந்திய நடிக நடிகைகளையும், முதல் முதலாக யாழ்ப்பாணத்திற்கு காட்சிப்படுத்தியவர்கள் மைந்தன் கலைவாரிதி உதயச்சந்திரன், கலைஞர் தங்கவேல் போன்றவர்களும் மெச்சத்தக்க கலைஞர்கள் ஆவார்கள்.

வெடியரசன் கலாமன்றம் என்ற பெயரில் இயங்கிவந்த நாடகமன்றத்தை கலாலய நாடகமன்றம் என்ற பெயரில் மாற்றம் செய்யவேண்டும் என முன்மொழிந்தவர் அமரர் சரவணபவன் ஆவார்.

மற்றும் கலாலய நாடகமன்றத்தின் 1வது நாடகமான குந்தியின் செல்வன் நாடகத்திலே அதியுயர் பாத்திரமான கர்ணன் வேடத்தைத் தாங்கி நடித்தபோது இவரின் இளகிய நடிப்பில் உருகிய பார்வையாளர் சிலர் அழுததை நாம் நேரில் கண்டோம்.

மேலும் இன்னிசைக்குழு சின்னமேளம், நாடகங்கள் போன்றவற்றிற்கு ஆர்மோனியம் இசைப்பதில் வல்லவராயிருந்தார். கலைவாரிதி உதயச்சந்திரன் அவர்கள் மீண்டும் இயக்கிய குந்தியின் செல்வன் நாடகத்திலும் விதுரனாக வந்து தனது வில்லை முறித்தகாட்சி இன்னும் கண்முன்னே நிழலாடுகின்றது. இந்நாடகத்திற்கு தேவையான அரங்கக்காட்சிப் பொருட்களை மனப்பூர்வமாக வரைந்து உதவினார். நீதிக்குப்பின் பாசம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகத்திலும் கதாநாயகனாக நடித்தார். மாரடைப்பு என்ற நாடகம் பிரதேசசெயலக மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றமை இவரது நடிப்புத் திறமையை எடுத்துக்காட்டுகின்றது.

கலாவினோதன் சின்னமணி வில்லிசைக் குழுவிலும் ஆர்மோனிய வாத்தியக்காரராக இசைத்தமை இவரது திறமைகளில் ஒன்றாக மிளிர்கின்றது.

இவரது பல்கலைகளில் எம்மோடு தொடர்புபட்டவைகளை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளோம். இத்தகைய பல்கலை நிபுணனை இழந்தது கலாலயத்திற்கு மாபெரும் இழப்பாகும்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*இங்ஙனம்,*
*கலாலய நாடகமன்றம்,*
*தொல்புரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பால் எனது தந்தையாயிருப்பவனுக்கு எனது பவாஞ்சலிகள்

ஈரைந்து வருடங்களாக என்னைத் தோளில் சுமந்து, மார்போடு சேர்த்து, கண்டிப்பு சிறிதுமின்றி மனதில் நினைத்ததெல்லாம் கைகளிலே கிடைக்கச்செய்து, துன்பத்தை எல்லாம் எடுத்துக்கொண்டு, இன்பத்தை மட்டும் எனக்களித்து இளவரசனாய் எனை வளர்த்த என் தந்தை, பகுத்தறியமுடியா பத்துவயதினில் வைகுந்த ஏகாதசியில் கண்ணன் கழலினை அடைந்த நாள் முதல் தாய்ப்பாசமதில் மட்டும் வளர்ந்து வந்த எனக்கு, கானல் நீராய் கைகளில் சேரமுடியா தந்தைப் பாசமதை திகட்டத் திகட்ட எனக்களித்த எனதருமை மாமாவே!

முதன்முதலில் உங்களைப் பார்க்கும்போதே உங்கள் நிறம், உடல்வாகு, உயரம், முகக்கண்ணாடி எல்லாம் என் தந்தையைக் கண்ணெதிரே கொண்டு வந்த போதிலும், பகிடிகள் பலவிட்டு பகிர்ந்துகொண்ட உரையாடலில் புதிய நண்பனொருவன் கிடைத்தான் என்று தான் எண்ணினேன். என் திருமணத்தின்போது என்னவளைத் தன்மடி இருத்தி, அவள் கையை என் கையில் தாரைவார்த்து கன்னிகாதானம் பண்ணித்தரும் வேளையதில், யாருக்கும் தெரியாமல் உங்கள் கண்ணிலிருந்து என் கைகளில் விழுந்து நனைத்த கண்ணீர்த்துளிகளிலே கரைந்து வந்த ஓர் தந்தையிற்கான துடிப்பை நன்குணர்ந்தவன் நான்.

பார்ப்பதற்கு சாதாரணமானவன் போல தோற்றமளித்தாலும் நீங்கள் ஒரு பல்கலைக்கழகம் என்று உங்களுடன் வாழத்தொடங்கிய நாளிலிருந்து தான் உணர்ந்து கொண்டேன். ஆயிரமாயிரம் கருத்துக்கள் தன்னுள் இருப்பினும் மூடிக்கொண்டு அமைதியாய் இருக்கும் புத்தகம் தான் என் மாமா. தெரியாது என்று எந்த விடயங்களும் கிடையாது. சரளமாக ஆங்கிலம், சிங்களம் பேசுவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் பாடல்களின் இராகங்களைச் சரியாகச் சொல்லும் திறமையும் நான் பார்த்து வியந்தவற்றுள் ஒன்றுதான். வாகனங்கள், இயந்திரங்களைப் பழுதுபார்க்கும் கைவிரல்கள் தான், இன்னிசையாய் வாத்தியங்களை மீட்டுவதும், உயிர்ப்பான ஓவியங்களை வரைவதும், அழகான புகைப்படங்களை கிளிக் செய்வதும், உயிர்ப்புள்ள சிலைகளைச் செதுக்குவதுமாக எத்தனை சொக்கவைக்கும். நகைச்சுவை கலந்த பேச்சுக்களால் சூழ இருப்போரை சிரிக்க வைப்பதும், புதிர்கள் சிலவற்றைச் சொல்லி சிந்திக்க வைப்பதும் அவரது சுபாவங்களில் ஒன்று.

எம் மகன் அக்ஷைதனுக்கான சிறந்த வக்கீலாகவும், எமக்கெல்லாம் சிறந்த வழிகாட்டியாகவும், எதுவாக இருந்தாலும் பொறுமையாய் கற்றுத்தரக்கூடிய அன்பான ஆசானாகவும் இருப்பவர். என்மேலே அவர் காட்டிய அக்கறை, பாசம், அன்பு எல்லாம் அவரை எனக்குத் தந்தையாகவே நினைக்கவைக்கிறது. வெளியூரில் இருந்து நான் வீட்டுக்கு வரப்போகிறேன் என்றால் ஒரு சிறுகுழந்தை போல் வேறொரு இடமும் போகாமல் வாசலிலே காத்திருந்து அகம் மலர வரவேற்கும் அன்பு முகமும், ஒவ்வொரு வேளை உணவின்போதும் எனக்காக காத்துக்கொண்டு சாப்பிடாமல் இருப்பதுவும், தேநீர் குடிக்கும் போதெல்லாம் எனக்கும் சேர்த்து தருவதிலுள்ள ஆர்வமும் ஒரு மகனாய் என்னைக் களிப்புறச் செய்யும். கைச்செலவுக்காக அவரிற்குக் கிடைக்கும் பணத்தில் பீடி, சிகரெட் தவிர அவரிற்கென்று எதுவும் வாங்கியதாக நானறியேன். அதில் எனக்கானதும், அக்ஷைக்கானதுமான ஏதாவதொரு பொருள் நிச்சயமாய் வாங்கப்பட்டிருக்கும். நான் வெளிநாட்டிற்குப் போனதற்குப் பின்னர் அவரோடு கதைக்கும்போதெல்லாம் அவர் கேட்கும் ஒரேஒரு கேள்வி "எப்போது வருவீர்கள்" என்று மட்டும் தான். அவர் வினவலில் வெளிப்படும் தவிப்பு அவர் மனதில் எனக்கான தேடல்களை உறுதி செய்துகொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகநாமமான முருகேசு, கந்தையா, சரவணபவன் தலைமுறையில் மயுரன் வந்து சேர்ந்தது அபூர்வம் என்று பூரிப்படையும் உங்கள் நம்பிக்கையை என்றும் நான் நிஜமாக்குவேன் மாமா. எனது மகனை உங்கள் பெயர்சொல்லும் வாரிசாக உங்களைப் போலே வளர்த்துவிட வேண்டும் என்பதே எமது மிகப்பெரிய அவா. அதற்கு உறுதுணையாயிருந்து உங்கள் பூரண ஆசியுடன் குருவாயிருந்து அவனை நீங்கள் தான் வழிநடத்த வேண்டும்.

"பணம் உள்ளவர்கள் பணக்காரர்கள் அல்ல- மூன்று சிறந்த நண்பர்களைக் கொண்டவனே பணக்காரன்"


என்ற வார்த்தையினை நன்கு அறிவேன் நான். உங்களுக்காக மூன்று அல்ல, மூவாயிரம் நண்பர்கள் மாசற்ற அன்புடன் மனமுருகுவதைப் பார்க்கும் போது நீங்கள் பணக்காரனாக மட்டுமல்ல. ஓர் அதிசய சக்கரவர்த்தி ஆகினீர்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

"யாருக்குமே கிடைக்காத அரிய செல்வமே எங்கள் பவநிதி!
காலங்கள் கடந்தும் எம்முடன் தொடர்ந்துவருமே எம் பவஅருள்!
எப்போதுமே எம் மனையில் அணையாமல் ஒளிரும் தீபம் எங்கள் பவதீபம்!
என்றுமே எம்மைப் பிரகாசிக்க வைத்துக்கொண்டிருக்கும் எங்கள் பவஒளி!
அன்பால் என் தந்தையாயிருப்பவனுக்கு எனது பவாஞ்சலிகள்"

***அன்புடன்,***
***மயூரன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கலைஞனின் பாதையில்.....

கோயில்களில் சிரம்தாழ்த்தி கரம் வழிபடும் தெய்வங்களின் தெய்வீக தரிசனத்தை எம் கண்களால் தரிசிக்க வைத்தது அவரது கைவண்ணம். இலை மறைகாயாக வலம் வந்துகொண்டிருந்த கலாபூஷணம் சரவணபவன் இளமையிலே சிறந்த நடிகனாக, சிற்பியாக, புகைப்படக் கலைஞனாக மிளிர்ந்தவர். சிறந்த தொழினுட்பவியலாளனாக இயங்கமறுக்கும் எந்தவொரு இயந்திரத்தையும் திருத்தியியக்கும் தனித்திறமை பெற்றிருந்தவர்.

அமைதியான குடும்பத்தலைவனாக பாசமுள்ள தந்தையாக, பேரனாக, உடன்பிறந்தோருக்கு ஓடோடிவந்து உற்ற சகோதரனாக வாழ்ந்தவர். மூப்போடு கூடவந்த உடல் நோய்களையெல்லாம் சற்றும் சலிப்புறாமல் எதற்கும் தயாரென்று மனதளவில் சுகதேகியாகவே வாழ்ந்தவர்.

1978ம் ஆண்டு கல்விக் கண்காட்சியில் பலரையும் கவர்ந்த அவரது "பஸ்நிலைய" மாதிரியுருவே கொழும்புவரை சென்று "யாழ்நகரம்" என்ற மாதிரி சின்னமாய் யாழ் கல்வி வலயத்தால் காட்சிப்படுத்தப்பட்டது.

வாழ்வாதாரத்திற்காக வரைகலை வல்லுனராக யாழிலும், தென்னிலங்கையிலும் மத்திய கிழக்கிலும் தன் கைவண்ணத்தால் மிளிர்ந்தவர். வானுறையும் தெய்வங்களையெல்லாம் வையகத்தில் வரவழைத்து ஓவியத்திறமையால் யாவரும் தரிசிக்க வைத்த அந்த அரிய கலைஞன் என்றென்றும் எங்களுடன் நினைவில் வாழ்ந்து கொண்டிருப்பார்.

*பாசமுள்ள,*

*சின்னக்கா சின்னத்தான் குடும்பம்,*

*மருமக்கள், பெறாமக்கள், பேரன் பேர்த்திமார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திரான் முருகன் உவந்தளித்த திருமகன்

சரவணபவன் என்ற முருகனின் தெய்வீக நாமத்துடன் அந்திரான் முருகனால் உவந்தளிக்கப்பட்டு ஸ்கந்தபுஷ்கரணியின் முதல் மருமகனாக வந்த திருமகனே! அன்று முதல் இன்றுவரை இன்முகத்துடன் வலம்வந்து எம்முடன் இணைந்து செயற்பட்ட இனியவரே! பல்துறையிலும் பாண்டித்தியம் பெற்று விற்பன்னராக விளங்கி எங்கள் இல்லத்தின் ஒளியாக ஒளிர்ந்தவரே! மைத்துனர்கள், மைத்துனிகள், சகலன், சகலி, மாமா, பெரியப்பா என பல்வடிவம் தாங்கி, அன்புடனும் பண்புடனும் உறவாடி மகிழ்ந்து உதவிக்கரம் நீட்டி உத்தமனாய் வாழ்ந்தவரே!

இன்று நீர் எங்கே போய்விட்டீர் ஐயா? உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் என்று கூறாமல்கூறி இன்று எம்மைப் பிரிந்துவிட்டீரே! காலம் வந்ததோ? உமக்கு கணக்கு முடிந்ததோ? நம்ப முடியவில்லை. உமது இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாதது ஐயா! நாங்கள் தவியாய்த் தவிக்கின்றோம். இன்று நீர் எம்முடன் இல்லாவிடினும் நீர் எமக்கு என்றென்றும் ஓர் கலங்கரை விளக்குத்தான்.

*உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்,*
*அன்புமாமி, மைத்துணர், மைத்துணிகள்,*
*சகலன், சகலிகள், பெறாமக்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"சித்திரத்தைச் சித்தரிக்கும் சரவணபவன்
சித்திரபவனாய்ச் சரித்திரத்தில் சதாசர்வகாலமும்..."

ஜயந்திமதி செல்வநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் உள்ளத்திலிருந்து...

நண்பனாய் மந்திரியாய் புத்தம் புதுத் தொழில் நுட்பங்களுக்கும் ஓவியம் சங்கீதம் போன்ற நுண்கலைகளின் தேர்ச்சிக்குமான நுட்பங்களைச் சொல்லித் தரும் நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் அனைத்துச் சகோதர சகோதரிகளுக்கும் ஆபத் பாந்தவனாய், இன்னலிலே கை கொடுக்கும் இனிய காவலனாய் அனைவரது வாழ்வின் முக்கிய தருணங்களிலும் முன் நின்று தோள் கொடுப்பதுடன் அவற்றைப் புகைப்பட வடிவில் காணொளி வடிவில் ஆவணப்படுத்தித் தரும் அன்புக்குரியவனாய் மிக மிக ஆழ்ந்த அன்பை மிக மிகத் துல்லியமாக தனது அத்தனை சிறு சிறு உதவிகள்மூலம் புலப்படுத்தி எம்மையெல்லாம் நெகிழ வைத்த ஆதர்ச சகோதரனாய்த் திகழ்ந்த அன்புப் பப்பி எமக்கு மட்டுமல்ல, எமது வாரிசுகளுக்கும் நீங்கள் அணுக எளிமையான இனிமையான ஆழ்ந்த அன்பும் அக்கறையும் காட்டும் பவா மாமா, பப்பிச் சித்தப்பா (பப்பிச் சிப்பத்தா) எந்தச் சகோதரத்தைக் கேட்டாலும் ''பப்பி என்மீது உயிரையே வைத்திருக்கிறது" என்று சொல்லுமளவு ஒவ்வொருவர் மீதும் தனிப்பட்ட அன்பும் அக்கறையும் காண்பிக்க எப்படித்தான் உங்களால் முடிந்ததோ.

அத்தனை தூரம் மனதிற்கு ஆறுதல் தரும் அன்பைப்பொழிந்த அன்புக் கருவூலமே "கோமாத் தங்கமே என்னாலா பசிக்கிறதோலா" என்று தனக்கு அடுத்த சகோதரி அழும்போது விசாரித்த அந்தச் சின்னஞ் சிறு மழலைச் சிறுவனின் அன்பு அவன் தாத்தாவாகி அமரத்துவம் அடையும் காலம் வரை எல்லாச் சகோதரர்கள் மீதும் நிலைத்திருந்தது என்பதை எல்லாச் சகோதர சகோதரிகளுமே உணர்ந்ததாலேயே இன்று ஆற்றொணாத் துயரால் நிலை குலைந்து போய் தம் துயரை வெளிப்படுத்த இயலாமல் வாயடைத்து நிற்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களது அனைத்துத் திறமைகளையும் தகைமைகளையும் ஏனையோர் விபரித்ததுபோல் சிலாகித்ததுபோல் எம்மால் இயலவில்லை பப்பி! எம்மீது குறிப்பாகப் பெண்சகோதரங்கள் மீது அளவிலா அன்பைச் சொரிந்த ஓர் அந்தரங்கத் தோழியாகவல்லவா நீங்கள் திகழ்ந்தீர்கள். மாறுபடா அன்பையும் அக்கறையையும் மறையும் காலம் வரை எம்மீது செலுத்திய உங்களை இனி எந்தப் பிறப்பில் காண்போமோ பப்பி! எம்மை இப்போதும் அழவைப்பதெல்லாம் உங்கள் அன்பு அக்கறை ஆத்மார்த்த பாசம். இனி எமக்கு வழங்க யார் இருக்கிறார்கள் என்கின்ற ஆதங்கம் தான் எமக்கு. பாசத்தை அக்கறையை ஆத்மார்த்த உள்ளன்பை வாரி வாரி வழங்கிய தங்கள் நல்லாத்மா இறை நிழலில் ஆழ்ந்த நிம்மதியையும் சாந்தியையும் அடைவதாக

ஓம் சாந்தி!

*பரிமளவாச சகோதரர்கள்.*

## பெறாமக்கள்.......

பெரியப்பா என வாய் நிறைய நாம் அழைத்தாலும் நீங்கள் காட்டும் அன்பு எமது தந்தைக்குரியது. நாம் பிறந்தநாள் முதல் நீங்கள் கதிரையில் மயக்கமடையும் வரை எம்மையே சுற்றி சுற்றி எமக்காக உருகி எம்மை வளர்த்த தெய்வம் அல்லவா நீங்கள்! ஏதாவது காரணத்தால் நாம் அழுதால் துடிதுடித்து எம் அழுகையை நிறுத்த எது வேண்டும் என்றால் செய்யும் ஜீவன் நீங்கள் தானே. பாடசாலைக் காலங்களில் காலையில் எழுந்து நாம் பாடசாலை பேரூந்தில் ஏற செல்லும் இடத்திற்கு எம்முடன் வந்து நாம் வான் ஏறிப்போகும் வரை அவ்விடத்திலிருந்து தினமும் "என்னிடம் இவ்வளவு தாண்டி இருக்கு'' என்று தன்னிடம் இருக்கும் பணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைச்செலவுக்காக எம் மூவருக்கும் கொடுத்து விடுவீர்களே! அதே போல் பாடசாலை முடிந்து வரும் நேரத்தில் பஸ் வரும் வரை காத்து நின்று எம் பாடசாலைப் பைகளை சுமந்தபடி எம்மை வீட்டில் விட்ட பின்னரே நீங்கள் வீடு செல்வீர்கள். உங்கள் அக்கறையை எப்படி மறக்கமுடியும் பெரியப்பா? பாடசாலைக் கணிப்பீடாக இருந்தாலும் கண்காட்சியாக இருந்தாலும் எமக்காக நீங்கள் உருவாக்கித் தரும் உபகரணங்கள் தானே முதலிடத்தை தட்டிவிடும். அது மட்டுமா? உங்களுடைய உபகரணங்கள் நன்றாக இருக்கிறது என ஆசிரியர்கள் தமக்காக வாங்கிடுவார்கள். எவ்வளவு பெரிய கலைஞனாக இருந்தாலும், அதனை நினைத்து சிறிதும் தலைக்கனம் இல்லாது, உம் மனைவியின் சகோதரியின் பிள்ளைகளாகிய எம்மை, பாசத்துடனும் அக்கறையுடனும் அன்புடனும் தந்தையாய் வளர்த்து விட்டீர்களே. உங்களுக்காக தேநீர் போடுவதை தவிர வேறு என்ன செய்யவிட்டீர்கள் எம்மை? எது செய்ய வந்தாலும் 'எனக்கு வேண்டாம்.' 'நீ கஸ்ரப்படாதே' என்று தானே சொல்லுவீர்கள் உம் இழப்பை வார்த்தையால் சொல்லமுடியுமா? பெரியப்பா நாம் அழைத்தாலும் அப்பாவாக எம்முள் உணர்வில் வாழும் உங்கள் நல் ஆத்மா இறைவனிடம் அமைதியடையட்டும்.

*அன்பின்,*

***(Your May Flowers)***

*ஐஸ்வர்யா, சௌந்தர்யா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள்.....

உதிரத்தில் உதிக்காத போதிலும்
உயிராய் வளர்த்த தந்தை நீர்
உரு அளிக்காத போதிலும்
உருகி அன்பளித்தீர் பெரியப்பா!

கணிப்பீட்டுக்காக பொருட்கள் செய்யக் கேட்பேன் - முதல்நாள்
கண்விழித்து இரவிரவாய் செய்து தருவீர்கள் அடுத்தநாள்
உமது கைவண்ணத்தில் கலைவண்ணமான பொருளனைத்தும்
உம் புகழ் பாடுகிறது இன்றும் எம் வகுப்பறைகளில்

என்றும் ஏனென்று கோளாமல் கேட்பதை தந்தீர்
இன்று ஏனென்று சொல்லமல் கேளாததை தந்தீரா?
அன்று நான் சிந்திய கண்ணீரை நகைத்து துடைப்பீர்
இன்று நான் சிந்தும் கண்ணீரைக் கண்டு துடைத்தீரா?

*கீர்த்திகா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. கந்த ஷஷ்டி கவசம்

குறள்வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்க வென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங்கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம் சிவ குகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக்காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாவிற் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முடியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதர் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கை கால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விக்ஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விக்ஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகியவேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராய!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலது அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாதவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அகூஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும்வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கந்தகுரு கவசம்

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப் பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தை கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்வாய்
சித்தி விநாயக ஜயமருள் போற்றுகிறேன்......
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த்து என்னை ரக்ஷித்திடுவீரே
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குகா சரணம் சரணம்......
குருகுகா சரணம் குருபரா சரணம்
சரணம் அடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத் தானறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்......

அவதூத சத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருள் இன்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்தகுருநாதா
ஷண்முகா சரணம் சரணம் ஸ்கந்த குரோ......
காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
அறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய்......
தகப்பன் ஸ்வாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
ஸ்வாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்
சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெலாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே....
ஆறுமுக ஸ்வாமி உன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்பு மயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்கிரகித்திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல் கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே...
தேவரைக் காத்த திருச்செந்தில் ஆண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்ய ஜோதியான கந்தா
பரஞ் ஜோதியும் காட்டி பரிபூர்ணமாக்கிடுவாய்
திருமலை முருகா நீ திடஞானம் அருள் புரிவாய்
செல்வமுத்துக் குமரா மும்மலம் அகற்றிடுவாய்......

அடிமுடி யறியவொணா அண்ணா மலையோனே
அருணாசலக் குமரா அருணகிரிக்கு அருளியவா
திருப்பரங்கிரிக் குகனே தீர்த்திடுவாய் வினை முழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுக்குடிக் குமரா ஏவல்பில்லி சூனியத்தை......
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா எண்கண் முருகா நீ
என்னுள் அறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா......
அறிவொளியாய் வந்து நீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்
திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமலம் அகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானுபூதி தாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச் சிவனாக்கிடுவாய்......
குன்றக்குடிக் குமரா குருகுகனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராலிமலை ஷண்முகனே விரைவில் நீ வந்திடப்பா......
வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே
வெண்ணைமலை முருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்க்காம வேலவனே மனமாயை அகற்றிடுவாய்
காந்த மலைக் குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகா நீ மனத்தகத்துள் வந்திடுவீர்......
கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலை குருநாதா கவலையெலாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி ஆண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை ஆண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்......

ஏழ்மை அகற்றிக் கந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
அறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்......
அருட்பெருஞ் ஜோதியே அன்பெனக் கருள்வாயே
படர்ந்த அன்பினை நீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கும் உள்ளது ஒருபொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்பாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்......
அன்பே ஓம் என்னும் அருள்மந்திரம் என்றாய்
அன்பை உள்ளத்திலே அசையாது அமர்த்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ
யாவர்க்கும் இனியன் நீ யாவர்க்கும் எளியன் நீ......

யாவர்க்கும் வலியன் நீ யாவர்க்கும் ஆனோய் நீ
உனக்கொரு கோயிலை என் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணம் ஐயா
அபாயம் தவிர்த்துத் தடுத்தாட் கொண்டருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழல்வெயில் நீர்நெருப்பு மண்காற்று வானதிலும்......
பகைமையை அகற்றி அபயமளித்திடுவீர்
உணர்விலே ஒன்றி என்னை நிர்மலமாக்கிடுவாய்
யானென தற்ற மெய்ஞ் ஞானமது அருள்வாய் நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா
சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா......

ஆகமம் ஏத்தும் அம்பிகை புதல்வா
ஏழையைக் காக்க நீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ......
ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ
அடியனைக் காத்திட அறிவாய் வந்தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா..

காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடராய் மெய்கண்ட தெய்வமே
மித்தையாம் இவ்வுலகை மித்தையென்று அறிந்திடச்செய்
அபயம் அபயம் கந்தா அபயம் என்று அலறுகின்றேன்
அமைதியை வேண்டி அறுமுகவா வாவென்றேன்......
உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டியது உன்அருளே அருள்வது உன் கடனேயாம்
உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அட்டமா சித்திகளை அடியனுக்கு அருளிடப்பா......
அஜபை வழியிலே அசையாமல் இருத்திவிடு
சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள் ஒளிக் காட்சியை அகத்துளே காட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவை அறிந்திடும் அவ்வருளையும் நீ தந்துவிடு.....
அனுக்கிரகித்திடுவாய் ஆதிகுருநாதா கேள்
ஸ்கந்தகுரு நாதா ஸ்கந்தகுரு நாதா
தத்துவம் மறந்து தன்னையும் நான் மறந்து
நல்லதும் கெட்டதும் நான் என்பதும் மறந்து
பாவ புண்ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்.....
அருள் வெளிவிட்டு இவனை அகலாது இருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ
சித்தியிலே பெரிய ஞானசித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளி சிவசித்தர் ஆக்கிடுவாய்......
சிவனைப் போல் என்னைச் செய்திடுவது உன் கடனே
சிவசத் குருநாதா சிவசத் குருநாதா
ஸ்கந்த குருநாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளினைப் பிடித்தேன் தந்திடு வரம் எனக்கு
திருவருட் சக்தியைத் தந்தாட் கொண்டிடுவாய்....

சத்ருப் பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டு
கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென்கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசையிலும் என்னைத் திருவருளால் காப்பாற்றும்
தென்மேற்கிலும் என்னைத் திறன்வேலால் காப்பாற்றும்.....
மேற்குத் திக்கில் என்னை மால்மருகா ரட்ஷிப்பாய்
வடமேற்கிலும் என்னை மயிலோனே ரட்ஷிப்பாய்
வடக்கில் என்னைக் காப்பாற்ற வந்திடுவீர் சத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே
பத்துத் திக்குத் தோறும் எனை பறந்துவந்து ரட்ஷிப்பாய்
என் சிகையையும் சிரசினையும் சிவகுரோ ரட்ஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக்கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்கள் இரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிகள் இரண்டையும் நல்லவேல் காக்கட்டும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிகள் இரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்கள் இரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டினையும் தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நன் முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களைக் கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்.....
கழுத்தைக் கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள்கள் இரண்டையும் தூய வேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்....
ஹ்ருதயத்தில் கந்தன் இனிது நிலைத்திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமைமைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவயுடைக் குதத்தோடு
இடுப்பை முழங்காலை இணையான கால்களையும் புறங்கால்
விரல்களையும் பொருந்தும் உகிர் அனைத்தையுமே.....

உரோமத் துவாரம் எல்லாம் உமைபாலா ரட்ஷிப்பாய்
தோல் ரத்தம் மஜ்ஜையையும் மாம்சமென்பு மேதசையும்
அறுமுகவா காத்திடுவீர் அமரர் தலைவா காத்திடுவீர்
என் அகங்காரமும் அகற்றி அறிவொளியாய் இருந்தும்
முருகா எனைக் காக்க வேல் கொண்டு வந்திடுவீர்....
பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் ஸெளம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் என்றும்
க்லெளம் ஸெளம் நமஹ என்று சேர்த்திடடா நாள்தோறும்
ஓமிருந்து நமஹவரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி.....
ஒருமனத் தோடு நீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழுமனத்தோடு ஏத்திட்டால்
மும்மலம் அகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்ல வேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித் தலம் ஆகுமப்பா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹ்ருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்கு காலபயம் இல்லையடா
காலனை நீ ஜயிக்க கந்தனைப் பற்றிடடா
சொன்னபடிச் செய்தால் சுப்ரமண்ய குருநாதன்.....
தண்ணொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே
மூலத்தை நீ ஜபித்தே முக்தனுமாகிடடா
அக்'ர லக்'மிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும்.....
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனுமாவாய் நீ
கோடித்தரம் ஜபித்துக் கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதை நீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே.....

வேதாந்த ரகசியமும் வெளியாகும் உன்னுள்ளே
வேத சூட்சுமத்தை விரைவாகப் பற்றிடலாம்
சுப்ரமண்யகுரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட் பெரும் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்....
சித்தியையும் முக்தியையும் ஸ்கந்தகுரு தந்திடுவான்
நின்னையே நான் வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா வந்திடுவாய் இவனுளே நீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறிவாகவே நீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா.....
பகுத்தறிவான கந்தன் பரங்குன்றில் இருக்கின்றான்
பழனியில் நீயும் பழம்ஜோதி ஆனாய் நீ
பிரம்மனுக்கு அருளியவா ப்ரணவப் பொருளோனே
பிறவா வரமருளி ப்ரம்ம மயமாக்கிடுவாய்
திருச்செந்தூரில் நீ சக்திவேல் தாங்கி விட்டாய்.....
பழமுதிர் சோலையில் நீ பரஞ்ஜோதி மயமானாய்
ஸ்வாமி மலையிலே சிவஸ்வாமிக் கருளிய நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
கந்தகிரியை நீ சொந்தமாக்கிக் கொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாஸ்ரம ஜோதியே.....
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கின்ற பெருவரம் நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்து நீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்....
சரணம் அடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னருளாலே நான் உயிரோடிருக்கின்றேன்
உயிருக்குயிரான கந்தா உன்னிலென்னைக் கரைத்திடப்பா
என்னில் உன்னைக் காண எனக்கு வரமருள்வாய்...

சீக்கிரம் வந்து சிவசக்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்திரியம் அடக்கி இருந்தும் அறிகிலேன் நான்
மனதை அடக்க வழி ஒனறும் அறிந்திலேன் நான்
ஸ்கந்தா உன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே..
சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பு எல்லாம் நின்னையே நினைந்திடச் செய்திடுவாய்
திருமுருகா உன்னைத் திடமுற நினைத்திடவே....
திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யானந்தமதில்
நித்யானந்தமே நின்னுரு வாகையினால்
அத்வைத ஆனந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகா கேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா கேள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ப்பொருளைக் காட்டி மேன்மை அடைந்திடச்செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்
தாரித்திரியங்களை உன் தடி கொண்டு விரட்டிடுவாய்
துக்கங்கள் அனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா.....
மெய்யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுகமான குரோ அறிந்திட்டேன் உன் மகிமை
இக்கணமே வருவாய் என் ஸ்கந்த குருவே நீ
என்னைக் காத்திடவே எனக்கு நீ அருளிடவே....

அரைக் கணத்தில் நீயும் ஆடி வருவாயப்பா
வந்தெனைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்ரமண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய் நீ.....
ஞான தண்ட பாணியே என்னை ஞான பண்டிதனக்கிடுவாய்
அகந்தையெல்லாம் அழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வையப்பா
அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்......
உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லை இல்லாத அன்பே இறைவெளி என்றாய் நீ
அங்கிங்கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்....
அன்பே ஹரியும் அன்பே ப்ரமனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்.....
அன்பே மௌனம் அன்பே மோகம்
அன்பே ப்ரம்மமும் அன்பே அனைத்தும் என்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லை என்றாய்
எங்கும் நிறைந்த அன்பே என் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரே தான்....
ஸ்கந்தாஸ்ரமத்தில் ஸ்கந்தகுரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸ்கந்தாஸ்ரமம் தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு......
எல்லை இல்லாத உன் இறைவெளியைக் காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உன்னையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்
நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்....

விட்டிட மாட்டேன் கந்தா வீட தருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
ப்ரம்மமந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியை காட்டிடுவாய்
சிவயோகியாக எனைச் செய்திடும் குருநாதா....
ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடி யராக்கி மெய் வீட்டில் இருத்திவிடும்
கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரி குருநாதா.......
கருவூரார் போற்றும் காங்கேயா கந்தகுரோ
மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னிமலைக் குமரா சித்தர்க்கு அருள்வோனே
சிவவாக்கியர் சித்தர் உனைச் சிவன் மலையில் போற்றுவரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனியில் போகருமே பாரோர் வாழப் பிரதி'டித்தான்.....
புலிப்பாணி சித்தர்களால் புடை சூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் அருள்வீரே
கற்றவர்களோடு என்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ளஇடம்......
ஸ்கந்தகிரி என்பதை தான் கண்டுகொண்டேன்
- கண்டுகொண்டேன்

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழநிமலை முருகா கேள்
கொங்குதேசத்தில் குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்.......

கன்னிமார் ஓடையின்மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாஸ் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமுல மானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
சுகவனேசன் மகனே சுப்ரமண்ய ஜோதியே.....
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமானந்தமதில் எனை மறக்க பாலிப்பாய்
மால் மருகா வள்ளி மணவாளா ஸ்கந்தகுரோ
சிவகுமாரா உன்கோயில் ஸ்கந்தகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப்பிழம்பான சுந்தரனே பழனியப்பா.....
சிவஞானப் பழமான ஸ்கந்தகுருநாதா
பழம் நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவாவினன் குடியில் திருமுருகன் ஆனாயோ
குமரா முருகா குருகுகா வேலவனே
அகத்தியர்க்குத் தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை.....

கலியுக வரதனென்று கலசமுனி உனைப்புகழ்ந்தான்
ஔவைக்கு அருள் செய்த அறுமுகவா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகருக்கருள் செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா....
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தகிரி ஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள ஸ்கந்தகுரோ
ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்....
உன்னை அன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தன் என்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்
புவனேஸ்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திருவடி சாட்சியாக....
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்
நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்
நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்
முருகா முருகாவென்றே மூச்செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன்.....

அங்கிங்கு எனாதபடி எங்குமே முருகனப்பா
முருகன் இலாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா
அருளெல்லாம் முருகன் அன்பெல்லாம் முருகன்
ஸ்தாவர ஜங்கமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்....
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
ஸ்கந்தாஸ்ரமம் இருக்கும் ஸ்கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் சாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ.....
சந்தேகம் இல்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா
சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தகுருவே சத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு....
சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே நீ
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு
அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கி விடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமதை சொந்தமாக்கிக் கொண்டு நீ....
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்
பிறவிப் பிணி அகலும் ப்ரம்மானந்த முண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஏத்திடப்பா...

சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்
கவசம் ஏத்துவீரேல் கலியை ஜெயித்திடலாம்.....
கலி என்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமே நீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தூன்றி ஏத்துவோர்க்கு
அஷ்ட ஐஸ்வர்யம் தரும் அந்தமில்லா இன்பம் தரும்
ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரோடிடுவன்.....
வாழையடி வாழையைப்போல் வம்சமதைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்யமும் சர்வமங்களமும் பெருகிடுமே
ஸ்கந்தகுரு கவசமிதை கருத்து நிறுத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமம் குரோதம் கலிதோஷம் அகற்றுவிக்கும்.....

முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம் பொருள் இன்பம் வீடு அதிசுலபமாய்க் கிட்டும்
ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமிலா உள்ளத்தோடு கந்தகுரு கவசம் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரத்தா பக்தியுடன் சிவகுமரனை நினைத்துப்.....
பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்
கந்தகுரு கவசமிதை ஒரு மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று
காத்திடுவான் கந்தகுரு கவலை இல்லை நிச்சயமாய்....
ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ
கந்தகுரு கவசம் தன்னை ஓதுவதே தவம் எனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான
இகபரசுகம் உண்டாம் எந்நாளும் துன்பம் இல்லை
துன்பம் அகன்று விடும் தொந்தரவுகள் நீங்கிவிடும்.....
இன்பம் பெருகிவிடும் இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப்பிணி அகற்றி ப்ரம்ம நிஷ்டையும் தந்து
காத்து ரட்ஷிக்கும் கந்தகுரு கவசமுமே
கவலையை விட்டுநீ கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏற்றிவிடு ஏற்றினால்......

தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்
ஸ்கந்தகுரு கவசம் சம்சயப் பேயோட்டும்
அஞ்ஞானமும் அகற்றி அருள் ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்றும் முன்நிற்பன்......
உள்ளொளியாய் இருந்து உன்னில் அவனாக்கிடுவன்
தன்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவான்
ஸ்கந்தஜோதி யானகந்தன் கந்தகிரி இருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகின்றான் காட்சியுமே.....
கந்தன் புகழ் பாடக் கந்தகிரி வாருமினே
கந்தகிரி வந்து நிதம் கண்டுய்ம்மின் ஜகத்தீரே
கலிதோஷம் அகற்றுவிக்கும் கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ் பெறுமின்
ஸ்கந்தகுரு கவச பலன் பற்றறுத்துப் பரம்கொடுக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதரம் கவசம் ஓதின் உள்ளமுக்குப் போகும்
இருதரம் ஏற்றுவீரேல் எண்ணியதெல்லாம் கிட்டும்
முன்றுதரம் ஓதின் முன்னிற்பன் ஸ்கந்தகுரு
நான்குமுறை தினம் ஓதி நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினம் ஓதி பஞ்சாட்சரம் பெற்று....
ஆறுமுறை யோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழு முறை தினம் ஓதின் எல்லாம் வசமாகும்
எட்டுமுறை ஏத்தில் அட்டமா சித்தியும் கிட்டும்
ஒன்பதுதரம் ஓதின் மரணபயம் ஒழியும்
பத்துதரம் ஓதி நித்தம் பற்றற்று வாழ்வீரே......
கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசம் ஓதி கந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினை எல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடை நீரை கைகளில் நீ எடுத்துக்....
கந்தன் என்ற மந்திரத்தைக் கண்மூடி உருவேற்றி
உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டிட்டால் உன்
சித்த மலம் அகன்று சித்த சுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு கந்தகிரி ஏறிடுவீர்.....
கந்தகிரி ஏறி ஞான ஸ்கந்தகுரு கவசமிதைப்
பாராயணம் செய்து உலகில் பாக்கியமெல்லாம் பெற்றுடுவீர்.

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆறுமுக கவசம்

நினைத்தாலே வேலுடனே மயிலுடனே - கந்தன்
அழைத்தாலே அருளும் பொருளும் அருள்பவனே
கந்தனை நினைமனே அகலும் வினை ஆறுமுகன் அருட்கவசம் துணை
அனைவர் துயர் தீர தினமும் எழுந்து அழகனிரு பாதம் விழு

அழகன் முருகன் அவன் இருபாதம்
விழுந்திட விலகும் அண்டிய பாவம்
அழகன் முருகன் அவன்திருநாமம்
உரைத்திட மனதுள் எழுந்ததிக் கவசம்
திருமால் மருகன் திருக்கரம் இரண்டும்
தீராவினைகள் தீர்த்திட உதவும்
சிவனார் குமரன் திருவிழியிரண்டும்
சிரமம் துயரம் களைந்தருள் புரியும்
கார்த்திகை பாலன் செவிகளிரண்டும்
கருத்துடன் கேட்டு நம் குறையினை அகற்றும்
பார்வதி மைந்தன் பவளச்செவ்வாயும்
சரஸ்வதி திருமகள் அருளினைப் பொழியும்
ஐங்கரன் இளையோன் வேலும் மயிலும்
சஞ்சலம் சங்கடம் போக்கியே மகிழும்
பன்னிரு கரத்துடன் குன்றும் மலையும்
அமர்ந்தருள்பவனே சரவணபவனே.

சரவணபவனே சற்குரு பவனே
வள்ளி மணாளா வயலூர் வேலா
சென்னிமலைவாழ் செங்கல்வராயா
கண்ணிமைபோ லெமைக் காத்தருள் பாலா
வாசவன் மருகா வடிவேலழகா
மயில் வாகனனே வேலாயுதனே
மலைவாழ்பவனே மனமாள்பவனே
திரிபுரபவனே தினமருள்பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா கடம்பா கதிர்வேலவனே
ஐயா குமரா அறிவா னந்தனே
இந்திரன் போற்றும் சுந்தரவடிவே
ஈசனுக்குப தேசித்தவனே
திருமறை போற்றும் அருமறைப் பொருளே
ஓமெனும் மந்திர பொருள் உரைத்தவனே
அறுபடை வீடு இருந்தருள்பவனே
அழைத்திட உடனே எழுந்தருள்பவனே.

எமை ஆள்பவனே உமையின் மகனே
எங்கும் நிறைந்த எனதாண் டவனே
வரமருள் பவனே குருவே குகனே
வருவாய் அருள்வாய் சிவனின் மகனே
தாயென பணிந்திட சேயென அணைத்திட
அல்லும் பகலும் அனுதினம் துதித்திட
கனவிலும் நனவிலும் கந்தனென்றழைக்க
முருகா வருவாய் காத்தருள்புரிவாய்
கனிந்த முகத்துடன் சிரித்த முகத்துடன்
கருணை மனத்துடன் மலர்ந்த விழியுடன்
பூரண க்ருபை வழங்கும் முகத்துடன்
வறுமை அகற்றி வளம் நலம் அருள்வாய்
செந்தில் நாதா சிங்கார வேலா
ஓங்கார நாதா சூரசம்ஹாரா
குமரா குருபரா பால தண்டாயுதா
குருவாய் வருவாய் சிவசுப்ரமணியா
சிவசுப்ரமணியா தவசுப்ரமணியா
தரித்திரம் துடைத்திட தரிசனம் கிடைத்திட
தஞ்சமென்றடைந்த நெஞ்சில் இடம்பெற
அருள்வாய் அருள்வாய் பணிந்துணைப் புகழ்ந்திட
பழத்தினை படைத்திட பழவினை துடைத்திட
பழநியை அடைந்திட பாதங்கள் பணிந்திட
ஐங்கரன் முன்வர அவரைத் தொடர்ந்திட
வருவாய் முருகா முரசு முழங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாதவர்க்கும் வேண்டியவர்க்கும்
அண்டாதவர்க்கும் அண்டியவர்க்கும்
இறை தொண்டாற்றும் என்போன்றோர்க்கும்
வேண்டிய வரங்கள் தந்தருள் பவனே
திகட்டா அமுதாய் திகழுமுன் அருளை
திரும்பத் திரும்ப விரும்பி நீ அருளே
தத்துவ ஞானம் சிவதவயோகம்
தந்திடுவோனே தணிகாசலனே
ஆயிரத்தெட்டு சிவத்தலம் அமர்ந்து
அன்பரைக் காக்கும் அருட்சிவ கொழுந்து
இத்தரை மாந்தரை காத்தருள் எழுந்து
என் குறை போக்கி எனக்கருள் விரைந்து
குறமகள் குஞ்சரி வள்ளி மணாளா
குறிஞ்சித் தலைவா நெஞ்சினில் நிறைவாய்
நினைத்ததை நீயே நிறைவேற்றிடுவாய்
எனக்கெது வேண்டும் நீயே அறிவாய்

ஒரு முகம் கொண்டு ஊழ்வினை களைவாய்
இரு முகம் கொண்டு என்வினை களைவாய்
மும் முகம் கொண்டு முன்வினை களைவாய்
நான் முகம் கொண்டு நன்மைகள் புரிவாய்
ஐம் முகம் கொண்டு ஐயம் களைவாய்
அறு முகம் கொண்டு அனைத்தும் அருள்வாய்
திரு முகம் கொண்டு திருவருள் புரிவாய்
திருவாய் மலர்ந்து தினம் தினம் அருள்வாய்
ஒன்றாம் விழியால் ஒளியினைத் தருவாய்
இரண்டாம் விழியால் இருளினை களைவாய்
மூன்றாம் விழியால் வழியினைத் தருவாய்
நான்காம் விழியால் நல்வழி தருவாய்
ஐந்தாம் விழியால் அறிவொளி தருவாய்
ஆறாம் விழியால் அபாயம் தடுப்பாய்
ஏழாம் விழியால் ஏற்றம் கொடுப்பாய்
எட்டாம் விழியால் தேட்டம் தணிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் விழியால் எண்பதில் அருள்வாய்
பத்தாம் விழியால் பண்டிதம் அருள்வாய்
பதினொன்றாம் விழியால் படிப்பினைத் தருவாய்
பன்னிரு விழியால் பரிசள்ளித் தருவாய்
ஒருகரம் கொண்டு உயிரினம் காப்பாய்
இருகரம் கொண்டு இகம்பரம் சேர்ப்பாய்
முக்கரம் கொண்டு மூவுலகாள்வாய்
நாற்கரம் கொண்டு நற்பயன் அருள்வாய்
ஐந்தாம் கரத்தால் அருள்பொருள் தருவாய்
ஆறாம் கரத்தால் அரக்கரை அழிப்பாய்
ஏழாம் கரத்தால் ஏழ்மை களைவாய்
எட்டாம் கரத்தால் எட்டையும் அருள்வாய்
ஒன்பதாம் கரத்தால் என்பயம் களைவாய்
பத்தாம் கரத்தால் பக்தியைத் தருவாய்
பதினொராம் கரத்தால் சக்தியை அருள்வாய்
பன்னிரு கரத்தால் முக்தியும் அளிப்பாய்

ஈன்ற என் தாயை தந்தையைக் காப்பாய்
மனைவியைக் காப்பாய் மக்களைக் காப்பாய்
உடன்பிறந்தோரை உடனிணைந்தோரை
தினம் பணிவோரை தனம் தந்து காப்பாய்
சித்தரைக் காப்பாய் பக்தரைக் காப்பாய்
நிம்மதி கொடுத்துஎன் சந்ததி காப்பாய்
சக்தி கொடுப்பாய் சாந்தி அளிப்பாய்
சித்தி கொடுப்பாய் சிவசித்தி அளிப்பாய்
ஓங்கார நாதா சுடர்வேல் எடுத்தாய்
ஆங்காரம் கொண்ட அரக்கரை அழித்தாய்
ஓங்காரத்துடன் அவருடல் கிழித்தாய்
சூரனைக் கொன்றே தேவரைக் காத்தாய்
பிரம்மனை ஒருமுறை சிறையினில் அடைத்தாய்
உன்சிறு பிள்ளையென் பிழையினைப் பொறுப்பாய்
சிவன்பிள்ளை குகனே பிழைப்பினைக் கொடுப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கண் முருகா இருகண் வருவாய்
ஏந்தல் முருகா எனை ஏந்திடுவாய்
சிக்கல் தீர்த்திட சீக்கிரம் வருவாய்
திருமுகம் பார்த்திடும் பாக்கியம் அருள்வாய்
திருவேரக திருக் குமரா அருள்வாய்
திருவாவினன் குடி முருகா அருள்வாய்
திருப்போரூர் சிவ குமரா அருள்வாய்
திருவாய் குருவாய் இருந்தெமக் கருள்வாய்
செல்வம் அருள்வாய் ஷேமம் அருள்வாய்
சகலமும் அருள்வாய் சௌக்கியம் அருள்வாய்
சுகந்தை அருள்வாய் சோகம் களைவாய்
இன்பம் தருவாய் இன்னல் களைவாய்
வேலுடன் வருவாய் வேலவா அருள்வாய்
வேல் கைகொண்டு வேண்டுவ தருள்வாய்
செவ்வேல் ஏந்தி காவல் புரிவாய்
சேவடி போற்றும் சேவை அருள்வாய்
தெய்வானை நாயக தெய்வசிகாமணி
தேவைகள் வழங்கும் திவ்ய சிகாமணி
வல்வினை அகற்ற வந்த சிகாமணி
வழித்துணையாக வரணும் சிகாமணி

சீராய் வாழ்வை நகர்த்திட அருளே
வேண்டா உறவை விலக்கிட உதவே
திருச்செந்தூரை அடைந்திட அருளே
திருப்பணி என்றும் தொடர்ந்திட அருளே
ஆபத்தில் இருந்தெனை விடுபட உதவே
அபாயம் அதுஎனை தொடாது அருளே
தாகம் தணித்தருள் தணிகை வேலா
பாவம் தொலைத்தருள் சண்முகநாதா
யாதும் கொடுத்தருள் தண்டாயுதனே
ஏமம் சாமம் எமைக்காத் தருளே
ஞானம் அனைத்தும் ஞானவேல் அருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம் அடக்கிட ஆறுமுகன் அருளே
பாடாய்ப்படுத்தும் பிணிகளைந் தருளே
பகைவர் அனைவரை சிறைப்பிடித் தருளே
இல்லாமை எங்கும் இல்லா தருளே
எல்லாம் உன்செயல் என்றிடும் பொழுதே

விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
தொடும்வினை விடுபட வேல்வேல் முருகா
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
வேருடன் வினையற வேல்வேல் முருகா
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
பாவம் பொடிபட வேல்வேல் முருகா
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
சாபம் விடுபட வேல்வேல் முருகா
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
கொடிய விஷங்கள் நொடியில் இறங்கிட
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
பில்லி சூனியம் சக்தி இழந்திட
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
பெரும்பூதங்கள் அடங்கி ஒடுங்கிட
விடுவாய் விடுவாய் வேலினை விடுவாய்
பின்வரும் பேய்கள் அரண்டு மிரண்டிட
சிகையினைக் காக்க சிறுவேல் விடுவாய்
சிரசினைக் காக்க செவ்வேல் விடுவாய்
நெற்றியைக் காக்க நின்வேல் விடுவாய்
இமைகளைக் காக்க இனியவேல் விடுவாய்
இருகண் காக்க புனிதவேல் விடுவாய்
இருவிழி காக்க கதிர்வேல் விடுவாய்
நாசிகள் காக்க நல்வேல் விடுவாய்
செவிகளைக் காக்க கூர்வேல் விடுவாய்
கன்னத்தைக் காக்க கந்தவேல் விடுவாய்
பற்களைக் காக்க வல்வேல் விடுவாய்
நாவினைக் காக்க ஞானவேல் விடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டினைக் காக்க உன்வேல் விடுவாய்
தோள்தனை காக்க ரத்னவேல் விடுவாய்
மார்பினைக் காக்க மந்ரவேல் விடுவாய்
கைகளைக் காக்க திருவேல் விடுவாய்
கண்களைக் காக்க பெருவேல் விடுவாய்
குடற்பை காக்க குமரவேல் விடுவாய்
இடுப்பைக் காக்க முருகவேல் விடுவாய்
கருப்பை காக்க கனகவேல் விடுவாய்
எஞ்சிய உறுப்பைக் காப்பதுன் பொறுப்பே

வானவர் முனிவர் வந்துனை வணங்க
அமரரும் அனைவரும் வாழ்த்தியே மகிழ
அஷ்ட கணங்கள் அன்புடன் துதிக்க
துஷ்ட சக்திகள் தூரத்தில் ஒதுங்கிட
அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
அஷ்ட பைரவர் ஆனந்தம் அடைய
இஷ்ட தெய்வமே இடும்பா யுதனே
எனைக் காத்தருள எழுந்தருள் புரிக
வையகம் எங்கும் மங்களம் பொங்க
சஷ்டியில் பிறந்த சண்முகா வருக
கார்த்திகைப் பெண்ணின் மடிதனில் தவழ்ந்த
சரவணப் பொய்கை சரவணன் வருக
தொண்டர்தம் திருவே முருகா வருக
கொண்ட துயர்தனைத் துடைத்தே வருக
எண்திசை வணங்க எழுந்திட வருக
உன்வேல அதையென் எழுதுகோல் தருக

கல் என்று சொன்னால் நம்பிடவில்லை
கடவுள் என்றேன் நீ கைவிடவில்லை
சொல்லால் ஆட்சி புரிந்திட எனக்கு
செவ்வே லெடுத்து என் நாவில் நிறுத்து
அடியேன் கொடுத்த ஆறுமுக கவசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை நீ படிக்க விடுபடும் தோஷம்
அங்கம் துலக்கி ஆசையும் விலக்கி
அனுதினம் உரைக்க வரும் சந்தோஷம்
எண்ணியதெல்லாம் இனிதே நிகழும்
முன்வினை யாவும் உடனே விலகும்
துன்பம் அகலும் இன்பம் தவழும்
தொல்லை துயரம் இரண்டும் அகலும்
அஞ்ஞானம் அகற்றும் மெய்ஞானம் புகட்டும்
தன்மானம் காக்கும் சன்மானம் கிடைக்கும்
தளர்ச்சியை நீக்கும் வளர்ச்சியைக் கொடுக்கும்
சத்தியம் சொல்வது நிச்சயம் நடக்கும்
திருமுருகாற்றுப் படையினைத் தந்தும்
ஔவையின் ஞானம் அதை சோதிக்கும்
அருணகிரிக்குத் திருப்புகழ் அருளியும்
அடியேன் நிலைக்க கவசம் அளித்தும்

அருளும் பொருளும் தருவாய் போற்றி
அன்பே உருவாய் வருவாய் போற்றி
என்னில் உன்னைக் காண்பாய் போற்றி
உன்னில் என்னைக் காண்பேன் போற்றி
எங்கும் எதிலும் நிலைப்பாய் போற்றி
நெஞ்சம் முழுதும் நிறைவாய் போற்றி
தஞ்சம் தந்து மகிழ்வாய் போற்றி
பொங்கும் பசியினைக் களைவாய் போற்றி
கந்தா கடம்பா இடும்பா போற்றி
முருகா முத்துக் குமரா போற்றி
சரணம் சரணம் முருகா சரணம்
சரணம் செல்வக் குமரா சரணம்
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சண்முககவசம்

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருள (து) ஆகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகள் அறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என்அருள் ஈசன் ஆன
திண்திறள் சரவணத்தான் தினமும் என் சிரசைக் காக்க... (1)

ஆதியாம் கயிலைச் செல்வன்அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசுஇலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க... (2)

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க, வாயை
முருகவேள் காக்க, நாப்பல் முழுதும்நல் குமரன் காக்க
துரிசஅறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க... (3)

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள் விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை ஈராறு ஆயுதன் காக்க, எந்தன்
ஏசிலா முழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்கோன் காக்க... (4)

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தை மாமுருகன் காக்க
புறம்கையை அயிலோன் காக்க, பொறிக்கர விரல்கள் பத்தும்
பிறங்கு மால்மருகன்காக்க, பின்முதுகைச் சேய் காக்க... (5)

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்த்தியோன் காக்க, வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க, குய்ய
நாணினை அங்கி கௌரிநந்தனன் காக்க, பீஜ
ஆணியை கந்தன்காக்க, அறுமுகன் குதத்தைக் காக்க... (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சிடாது இடுப்பை வேலுக்கு இறைவனார் காக்க காக்க
அம்சகனம் ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன் விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண நேச ஆசான் திமிரு முன் தொடையைக் காக்க.. (7)

ஏரகத் தேவன்என்தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலைவாய்த்தே காக்க
நேருடைப் பரடு இரண்டும் நிகழ் பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க.. (8)

ஐயுறு மலையன்பாதத்து அமர் பத்து விரலும் காக்க
பையுறு பழநி நாத பரன், அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும், ஆதி விமல சண்முகவன் காக்க
தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க... (9)

ஒலியெழ உரத்த சத்தத் தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள எனைவேல் காக்க, கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க... (10)

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம் தடி பரசு ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர் என் மேலே ஓச்சின்,
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க.. (11)

ஔவியமுளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும் திடமுடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின், சராசரம் எலாம் புரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க.... (12)

கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலிமா யானை
கொடிய கோணாய் குரங்கு கோல மார்ச்சாலம் சம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடையுடை எதனா லேனும் நான் இடர்ப் பட்டி டாமல்
சடுதியில் வடிவேல் காக்க சானவிமுளை வேல் காக்க.... (13)

நகரமே போல் தழீஇ ஞானவேல் காக்க, வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யன் ஏறு ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால், எற் குழர் ஊறுஇலாது ஐவேல் காக்க
(14)

சலத்தில் உய்வன்மீன் ஐறு, தண்டுடைத் திருக்கை, மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான் நெடுந்துயர் தரற்கே உள்ள
குலத்தினால், நான் வருத்தம் கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடன் இருந்து காக்க, பாவகி கூர்வேல் காக்க... (15)

ஞமலியம் பரியன்கைவேல், நவக்கிரகக்கோள் காக்க
சுமவிழி நோய்கள், தந்த சூலை, ஆக்கிராண ரோகம்,
திமிர்கழல் வாதம், சோகை, சிரமடி கர்ண ரோகம்
எமை அணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க.... (16)

டமருகத்து அடிபோல் நைக்கும் தலையிடி, கண்ட மாலை
குமுறு விப்புருதி, குன்மம், குடல்வலி, ஈழை காசம்,
நிமிரொணா(து) இருத்தும்வெட்டை, நீர்பிரமேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று எறிந்தவன் கைவேல் காக்க.... (17)

இணக்கம் இல்லாத பித்த எரிவு, மாசுரங்கள், கைகால்
முணக்கவே குறைக்கும் குட்டம், மூலவெண்முளை, தீமந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலம் என்று அறையும் இந்த
பிணிக்குலம் எனை ஆளாமல் பெரும்சக்தி வடிவேல் காக்க (18)

தவனமா ரோகம், வாதம், சயித்தியம், அரோசகம், மெய்
சுவறவே செய்யும் மூலச்சூடு, இளைப்பு, உடற்று விக்கல்,
அவதிசெய் பேதி சீழ்நோய், அண்டவாதங்கள், சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல் காக்க (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமைப்புறு கிரந்தி, வீக்கம் நணுகிடு பாண்டு, சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல் தொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறு வலிப்போடு எழுபுடைப்பகந்த ராதி
இமைப்பொழுதேனும் என்னை எய்தாமல் அருள்வேல் காக்க (20)

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி எமபடர், வரினும் என்னை
ஒல்லையில் தார காரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க... (21)

மண்ணிலும் மரத்தின்மீது மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும்சாரி செய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும் வேறு எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்து அருள் ஆர்ச்'டி நாதன் வேல் காக்க காக்க... (22)

யகரமேபோல் சூல் ஏந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோடு ஆறும் ஆனோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழ் ஐவேல் கீழ்மேல் காக்க.... (23)

ரஞ்சித மொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல் கிழக்கில் திறமுடன் காக்க, அங்கி
விஞ்சிடு திசையில் ஞான வீரன் வேல் காக்க, தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோன் இகலுடைக் கரவேல் காக்க.... (24)

லகரமே போல் காளிங்கன்நல்லுடல் நெளிய நின்று
தகர மர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்,
நிகழ்எனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க, மேற்கில்
இகல் அயில்காக்க, வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க... (25)

வடதிசை தன்னில் ஈசன்மகன்அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேத போதகன் வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கையில் இருக்கும்ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில், கீழ்க்
கிடக்கையில் தூங்குஞான்றும் கிரிதுளைத்துள வேல்காக்க.. (26)

இழந்துபோகாத வாழ்வை ஈயும் முத்தையனார் கைவேல்,
வழங்கும் நல் ஊண் உண்போதும் மால்விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சு அடக்கும் போதும்
செழும்குணத்தோடே காக்க, திடமுடன் மயிலும் காக்க.... (27)

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலை, முன்எல் ஓம் சிவ சாமி காக்க
தெளிநடு பிற்பகல் கால், சிவகுரு நாதன் காக்க... (28)

இறகுடைக்கோழித் தோகைக்கு இறைமுன் இராவில் காக்க
திறலுடைச் சூர்ப்பகைத்தே, திகழ்பின் இராவில் காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன் மாறாது காக்க காக்க.... (29)

இனம்எனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனி அநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவோடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே.... (30)

"ஸ்ரீ சண்முக கவசம் முற்றிற்று. "எனை ஆதரித்த பரம ரகசிய
சக்தி எனை நம்பினோரை ஆதரியாது நிற்குமோ, ஐயம்
வேண்டாம்!""" பாம்பன் சுவாமிகள்.

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கந்தரநுபூதி

காப்பு

விபூதி தியானம்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறத் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

நூல்

1. மதயானை அனுசரிக்க

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

2. வணங்காரைத் தண்டிக்க

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

3. கல்வியில் மெச்ச

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடம்
தானோ போருளா வதுசண் முகனே.

4. துறவு பெற

வளைபட்டகைம்மா தொடுமக் களெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மாயையை ஒளிக்க
மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுணின் றுதயங் குவதே.

6. மாதரைத் தழுவ
திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்பு மதோ
பணியா யெனவள் ளிபதம் பணியும்
தணியா வதிமோக தயா பரனே

7. தீராப் பிணி தீர
கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

8. குடிகளைத் தன்வசமாக்க
அமரும் பதிகேளகமா மெனுமிப்
பிரமங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே.

9. பெண்ணாசை ஒழிக்க
மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் படரென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே

10. நமனை விலக்க
கார்மா மிசைகா லன்வரிற் சலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தளிகை சேர்க்க

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவெ லவநா லுகவித்
யாகா சுரலோ கசிகா மணியே.

12. களவு வெல்க

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறித் திலனே.

13. இருள்வழி கடக்க

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே.

14. பாத தரிசனம் செய்ய

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே ஒழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநாசி யொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே.

15. இருள்வழி கடக்க

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவவெண் குணபஞ் சரனே.

16. பேராசை விலக்க

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந் தரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. தன் நடத்தை மேன்மையாக

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனால்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே.

18. கற்பழியாதிருக்க

உதியா மரியா உணரா மறாவ
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூ ரபயங் கரனே.

19. இல்வாழ்க்கை நீங்க

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயல்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே.

20. அநுக்கிரகம் பெற

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா உபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே.

21. திருவடி வணங்க

கருதா மறவா நெறிகா ணவெனக்
கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

22. தவம் பெற

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் கழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. சலிகை சொல்ல

அடியைக் குறியா தறியா மையினால்
முடியைக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புனருங் குணபூ தரனே!

24. மாதர் வலையிலகப்பாடாதிருக்க

கூர்வேல் விழிமங் கயர்கொங் கையிலே
சோர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரோடுகுண் றுதோளைத்த நெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே

25. மகாவினை

மெய்ய யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ வடியே னலையத் தகுமோ
கையோ வயிலா கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே.

26. யாருமற்ற பேர்க்கு ஆதாரமாக

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவினோ தாமனோ
தீதா சுரலோ கசிகா மணியே.

27. பாக்கியத்தை விதிவழி அனுபவிக்க

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலேறியவா னவனே.

28. தான் அவன் ஆக

ஆனா வமுதே அயில்வே லரசெ
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகியவென் னைவிழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. கடவுள்முன் கோபமாற்ற
இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே.

30. வழக்குப்பேச
செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே.

31. கடவுள் முன்னிலையில் ஞானம் பெற
பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனவென் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே.

32. கொலை மறக்க
கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா சையனே.

33. துக்கம் ஒழிக்க
சிந்தை குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கங்கா முருகா கருணா கரனே.

34. பெண்களைத் தாயாக நினைக்க
சிங்கார மடந் தையர் தீநெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்ராம சிகா வலசண் முகனே
கங்கா நதிபால கிருபா கரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. சரீரவாஞ்சை ஒழிக்க

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல் வள்ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே.

36. கடவுளைக் காண

நாதா குமரா நமவென் றரனா
ரோதா யெனவோ தியதெப் பொருள் தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே.

37. தனது அகந்தையை ஒழிக்க

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே.

38. பிசாசம் ஒழிக்க

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழவே லவனே.

39. ஜனனம் எடாதிருக்க

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டனையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

40. மாயை தெளிய

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கியமக் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதனோ டுதிரிந் தவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. நித்திய தேகம் பெற

சாகா தெனையே சரண ங்களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

42. நின்ற நிலை நிற்க

குறியைக் குறியா துகுறித் தறியு
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலும்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே.

43. ஆசானாகி அனுக்கிரகிக்க

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளத் துகளா யினபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே.

44. குருமந்திரம் பெற

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடும் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழும் கழலே.

45. கல்வியில் சம்பாஷிக்க

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிச யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.

46. மனவருத்தந் தீர

எந்தா யுமெனக் கருடந் தையுநீ
சிந்தா குலமோ னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. ஆனந்த நடனங் கான
ஆறா றையுநீத் ததன்மே னிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே.

48. தற்சொருபங் காண
அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே.

49. தன்னை அறிந்து கொள்ள
தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் ஒருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிதா நினைவார்
கின்னம் களையும் கிருபைசூழ் சுடரே.

50. அவா அறுக்க
மதிகெட் டறவாடி மயங்கி யறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞான சுகாதி பவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே.

51. நினைத்தபடி தரிசனம் கொடுக்க
உருவா யருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

(முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. கந்தரலங்காரம்

### காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெ னப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

### நூல்

01. பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப் ப்ரபஞ்ச மென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமார க்ரு பாகரனே.

02. அழித்துப் பிறக்க வொட்டா அயில் வேலன் கவியை யன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்கு வெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

03. தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்தர லோகம் பிழைத்ததுவே.

04. ஓரவொட்டா ரொன்றை யுன்னவொட்டார் மலரிட் டுனதாள்
சேரவொட்டா ரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

05. திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பினால் மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவரத்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே

07. சளத்திற் பிணிபட் டசட்டுக் ரியைக்குட் டவிக்கு மென்ற
னுளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே.

08. ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்றவெந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே.

09. தேனென்று பாகென்று வமிக்கொ ணாமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவன்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று ச ரீரி யன்றே

10. சொல்லுகைக் கில்லையென் றெல்லாமிழந்து சும்மா விருக்கும்
எல்லையுட் செல்ல வெனைவிட்ட வாஇில் வேலனல்ல
சொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக்
கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே

11. குசைநெகிழா வெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிட வெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே.

12. படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகை யென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வேற்பு மிடிபட்டவே

13. ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிபட் டொட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

14. குப்பாச வாழ்க்கையிற் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாழ்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

15. தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடு முட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.

16. தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படிஇருங் கோள் எழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள் வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

17. வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மே! தெரி யாதொரு பூதர்க்குமே.

18. வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணும் கடைவழிக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைந்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லாமொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

20. கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி நாளுங்கள் வல்லினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.

21. மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்ந்தததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுருகா
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரசா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.

22. மொய்தா ரணிசூழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன் வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

23. தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

24. கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுசூழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

25. தண்டா யுதமும் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டிவிழவிடு வேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய வென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவுந்த கா! வந்து பார்சற்றென் கைக்கெட்டவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தியுடன்வரு வான் குரு நாதன் சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறும் கர்மிகளே.

27. ஓலையுந் தூதரும் கண்டுதிண் டாட லொழிச்தெனக்குக்
காலையு மாலையு முனனிற்கு மேகந்த வேண்மருங்கிற்
சோலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாயையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

28. வேலே விளங்குகையான் செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகழ்வதுவே.

29. கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசிந்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும் வெங் காம சமுத்திரமே.

30. பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீ செந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

31. பொக்கக் குடிலிற் புகுதா வகையுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேறொட்ட காவலனே.

32. கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை யெந்நாள் வந் திரட்சிப்பையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழு துங் கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார் வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்வரே.

34. பொட்டாக வெற்பைப் பொருதகந்தா தப்பிப் போனதொன்றற
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே

35. பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதனால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே

36. கழித்தோடு மாற்றிற் பெருக்கா னதுசெல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ்சே கரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டும்
கிழித்தோடு வேலென் கிளைஎங்ங னேமுத்தி கிட்டுவதே.

37. கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே

38. நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

39. உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த் தெனை யுன்னிலொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவேற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் றிருமரு காமயி லேறிய மாணிக்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே

41. பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.

42. நிணங் காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்க நிற்கும்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங் காட்டு மல்குற் குருகுங் குமரன் தாம் புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே.

43. கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலர்க்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப்
போற்றியன்பாற்
குவியாக் கரங்கள் வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே

44. கவர் வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க் கையிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே

45. ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே.

46. நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய் சித்ர மாதரல்குற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாய விநோத மனோதுக்க மானது மாய்வதற்கே.

47. பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.

48. புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

49. சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் றொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடி போய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

50. படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

51. மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை தேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

52. சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீ யணி பாசாங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சகபட்ச விட்சோப தீர குணதுங்கனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே

54. சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யே இலங் காபுரிக்குப்
போகைக்கு நீ வழி காட்டென்று போய்க்கட றீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

55. ஆங்கா ரமு மடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென் செய் வார்யம தூதருக்கே

56. கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவி கற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச் செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

57. பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றி நித்தம்
இருபிடி சோறு கொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே.

58. நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்தர் லோக சிகாமணியே.

59. பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரும் ஏற்பவர்க் கிட்ட திடாமல் வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. சிந்திக்கி லேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகி லேன் மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கிலேலுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே.

61. வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்த வா! பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

62. ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை அகிலமுண்ட
மாலுக் கணிகலம் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங் கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

63. பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வே லனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருவிச்
சாதித்த புத்தி வந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

64. பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள் திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் வையதுவே.

65. வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கன்
எட்டுங் குலகிரி யெட்டும் விட்டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரந்தனே.

66. நீர்க்குமி ழிக்கு நிகரென்பர் யாக்கை நில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கும ரர்க்கன் பிலாதவர் ஞான மிகவுநன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. பெறுநற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்றி லேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சராசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

68. சாடுஞ் சமரத் தனிவேள் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம் போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே.

69. தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச்சுவாமி யெனைத்தேற் றியபின்னர் காலன் வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்சத்தி-
-வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தனிப்பருங் கோபத்ரி சூலத்தையே.

70. விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே.

71. துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கி லென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே

72. சேந்தனைக்கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாத்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே

73. போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே

74. அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்தவன்பாற்
குராப்புனை தண்டையந் தாடொழல் வேண்டுங் கொடியவைவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றால்
இராப்பகலற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே.

75. படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மி விம்மி
நடிக்கின் றிலைநெஞ்சமெதஞ்ச மேது நமக்கினியே.

76. கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் ருன்றெறிந்த
தாடான னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

77. சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரவெண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே.

78. கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங் கொண்டாடுவீர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு வீர்நும் மறிவின்மையே.

79. பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலத்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேன்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென் முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.

81. தாரா கணமெனுந் தாய்மா றறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே.

82. தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்திர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே

83. தேங்கிய வண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளத்தினந்தனி வேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

84. மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மாற்றறி யேன்கற்ற கல்வியும்போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகி நிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே

85. காட்டிற் குறத்தி பிரான்பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுத மிகவெளிதே விழி நாசிவைத்து
மூட்டிக் கபால மூலாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப்பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

86. வேலா யுதன்சங்கு சக்ராயுதன் விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன் கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம் வரு மோயம னோடு பகைக்கினுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

88. வணங்கித் துதிக்க வறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகை கொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே.

89. ருகனெனைப் பட்டோ லையிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே

90. மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே

91. கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச் செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

92. தொண்டர் கண்டண்டி மொண்டுண்டிருக்குஞ் சுத்த ஞானறாத்
தண்டையும் புண்டரி கத்தரு வாய்சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண்டங்கொண்டு மண்டியிண்டக்
கண்டு ருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காவலனே.

93. மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினாலுலகமும் கேட்டதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. தென்னிய வேனலிற் கின்னளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன்றாள் வேட்டிலை சிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச்-
-சொல்லை நல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்ட நெஞ்சே.

95. யான்றா னெனுஞ் சொல்லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகமாய்க்
கீன்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சாற்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

96. தடக்கொற்ற வேண்மயி லேயிடர் தீரத் தனிவிடினீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

97. சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க வதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

98. கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே.

99. கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பரவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

100. இடுதலைச் சற்றுங் கடுதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட்டியவா கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நூற்பயன்

101.வேந்தர் தமக்குமஞ்சார்யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்கும் கந்தனன்னூல்
அலங்கார நூற்று னொருகவி தான்கற் றறிந்தவரே.

102.யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறு மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே

103.இராப்பக லற்ற இடங்காட்டி யானிருந்தே துதிக்கக்
குராப்புனை தண்டையந் தானரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள் மெச்சும்
பராக்ரம வேல திருதசங் கார பயங்கரனே.

104.செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென்முன் வந்தெதிர் நிற்பனே

105.ஆவிக்கு மோசம் வருமாறறிந்து னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் குழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே

106.கொள்ளித் தலையி லெறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடி முத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வன்னிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே.

107.சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னறுமுகவன்
வேலுந் திருக்கையுமுண்டே நமக்கொரு மெய்த்துணையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் பவன் பேசுகிறேன்.....

என் அன்புறவுகளே! நான் பவன் பேசுகிறேன். கடந்த 77 வருடங்களாக நீங்கள் அனைவரும் என்மீது காட்டிய அன்பிலும், அக்கறையிலும், மரியாதையிலும், கௌரவத்திலும் தான் எனது இந்த வாழ்க்கை முழுமைபெற்றுள்ளது. என் வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடிகளையும் அன்புடன் செதுக்கி அழகாக்கியது நீங்கள் மட்டுமே!

என்னை கலைஞன் என்கிறார்கள் கலாபூஷணம் என்கிறார்கள், தொழினுட்பவியலாளர் என்கிறார்கள், ஓவியர் என்கிறார்கள், ஹார்மோனியவித்துவான் என்கிறார்கள், சிறந்த சிற்பி என்கிறார்கள், நாடகநடிகன் என்கிறார்கள். இவ்வாறெல்லாம் 'அறத்திற்கு அன்புசார்பென்ற' வள்ளுவர் வாக்கிற்கமைய என்னை செய்யத்தூண்டியது உங்களின் அன்பும், ஊக்கமும், இறையாசிகளும் மட்டுமே!

"அன்பின் வழியது உயிர்நிலை - அ்.திலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு"

அதற்கமைய வெறும் என்பும் தோலும் உடையவனாக இல்லாமல் நிறைந்த அன்புடன், உயிர்ப்புடன், உணர்ச்சிபூர்வமாக நான் நடமாட வழிகாட்டிய இறைவனுக்கும் என்னைப்பெற்று பரிவுடன் வளர்த்த என் பெற்றோர்களிற்கும், உடன்பிறப்புக்கள், அவர்களின் வாழ்க்கைத் துணைகளிற்கும், என் குருநாதர், வழிகாட்டிகள், அவர்களின் உறவுகளிற்கும், என் பால்ய நட்புக்கள், என் உடன்பிறவா சகோதரர்களிற்கும், தொல்புரம் வாழ் உறவுகளிற்கும், வண்ணையில் பிறந்து, தொல்புரத்தில் வளர்ந்து, திருமணமாகி என் வாழ்க்கையை ஆரம்பித்த காலம் முதல் என் இறுதிக்காலம் வரை எனை அரவணைத்த என் மனைவி, மனைவியின் உறவுகள் மற்றும் நவாலி நண்பர்கள், என் தொழில் உறவுகள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

'காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல உங்கள் அனைவரதும் அன்பும் நிறைந்த ஆசிகளுமே என்னை இந்த சரவணபவனாய் வடிவமைத்து வைத்தது.

அத்துடன் மகன் இன்றிய என் பெரிய மனக்குறையைப் போக்கி எந்த தயக்கமுன்றி என்னை தந்தையாய் தாங்கி என்னை மனம் நெகிழ வைக்கும் எனதருமை மகன் என் மருமகன் மயூரன், மற்றும் வேறோர் கருவில் பிறந்திருந்தும் பாசத்தில் என்னை தந்தையாக்கிய என் உடன்பிறப்புக்களினதும், என் உடன்பிறவா சகோதரர்களினதும் என் மைத்துன மைத்துனிகளினதும் புத்திர புத்திரிகளே!

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்'

நீங்கள் எனக்கு மகவுகளாய் கிடைத்த காரணத்தினால் எப்பிறவியிலும் என்னை தீயவை நெருங்காது. உங்கள் அனைவரிற்குமே நான் எந்நாளும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். என் வாழ்வின் இறுதி நிமிடங்கள் வரை உங்கள் ஒவ்வொருவரினதும் நேசம் என்னை மிகவும் மனமகிழச்செய்தது. பெருமைப்படவும் வைக்கின்றது.

குறிப்பாக என்னருமைப் பேரன் அக்ஷைதன் என் வாழ்வின் துடிப்பாய் இருப்பவன். என் உயிராகுபவன். என் பேச்சுக்களில் நிறைபவன். என் உலகம் ஆகுபவன். அடிக்கடி என் குருவாய் இருப்பவன். என்னை எப்போதும் மகிழ்விப்பவன். எனை மனமுருகச் செய்பவன். சமயத்தில் என் வைத்தியனாகுபவன். என்னை அதிகமாய் நேசிப்பவன். அவனொடு இன்னும் சில காலமாவது வாழத்துடிப்பவன் தான் இந்த பவன். அவனின்றி ஒருசில மணித்தியாலங்கள் கூட இருக்கமுடியாத என்னால் காலக்கட்டாயத்தில் அவனைப் பிரிந்துபோகவேண்டிய இந்த வேளையானது மிகமிகக் கொடுமையாகது.

இவ்வுலகமும், உலகத்தில் தோன்றும் யாவுமே என்றும் நிலையில்லாதன. உயிர்களானது அறவழிப்படுமாயின் நிலையில்லா உடம்பைவிட்டு வீடுபேற்றை அடையுமென்பது நியதியாதலால் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதைத் தேற்றி நிலையில்லா இவ்வுலகில் இருந்து நிலையான பாசங்களையும் மாசற்ற நேசங்களையும் மனதோடு எடுத்துக்கொண்டு விடைபெறத் தயார்ஆகிறேன்.


மேலும் என் இறுதிக் காலமதில் நான் நினைவிழந்து சாய்ந்த நிலையிலும் என் மகளை ஒற்றையிலே தவிக்கவிடப் போகிறேனே என்ற ஏக்கம் உள்ளுக்குள்ளே ரணமாய் வலித்துக்கொண்டிருந்தது. ஆனால் அவளைத் தனியே தவிக்கவிடாமல் தோள்கொடுத்து சகோதரர்களாய் உதவிக்கரம் கொடுத்த ஒவ்வொருவருமே என்னால் மறக்கமுடியாதவர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்குமே மனதார நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

என் மனைவி மற்றும் மைத்துனிகளான என் உடன்பிறப்புக்களே! நான் பிரியமுடன் வளர்த்துவிட்ட என் பெறாமக்களே! எதுவுமே தெரியாமல் நான் நாற்காலியில் சாய்ந்துகொண்ட நொடி முதல் 'அத்தான்' எனவும் 'பெரியப்பா' எனவும் முதலுதவிகள் பல புரிந்து என்னை எழுப்புவதற்காய் முயற்சித்த உங்கள் கலங்கிய குரல்கள் உணர்வற்ற நிலையிலும் எனை உளமுருக்கிவிட்டது. அயலிலுள்ள வைத்தியரை அழைத்து வந்ததிலிருந்து வைத்தியசாலையில் என்னை பக்குவமாய் சேர்க்கும்வரை உடனிருந்த தர்ஷானந்தன் மற்றும் யது உங்கள் அன்பிற்கும் நான் தலைவணங்குகிறேன்.

மற்றும் என் பிரணா.... உன்னை என்னவென்று சொல்வேன்! வீட்டிலிருந்து எனை அழைத்துச் சென்றதிலிருந்து எனை வீட்டிற்கு அனுப்பிவைக்கும்வரை 19 நாட்கள் என்னைச்சுற்றி உன்னுலகை சுருக்கிக்கொண்டாயே! உனக்கான வேண்டுதல் எப்போதும் என் உளத்திலே இருக்குமடா! மிக்க நன்றி! உந்தனுக்கும் உன் நண்பனான Dr.ரஞ்சன், ஜனகன் அவர்களிற்கும் நினைவின்றி நான் இருக்கும் போது என் உள்ளுணர்வில் என் மகள் வரும்போதெல்லாம் ஓடோடி அருகில்வந்து 'பவாமாமா' என அன்பாக அழைக்கும் என் மகள் Dr.அறிவழகியிற்கும், என் மருமக்களான Dr.லோகா, சரவணன், Dr.ஜீவா, Dr.றொகான் அவர்களிற்கும், 19 நாட்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலயத்துக்காக அவர் திரைச்சீலை வரைந்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேரனுக்காக வேண்டி வரைந்த திரைச்சீலை




பெரிய தந்தைக்காக அவர் வரைந்த ஓவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரைச்சீலைக்காக அவர் வரைந்த ஓவியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆலயத்துக்காக அவர் வரைந்த ஓவியங்களில் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரெஜிபோமில் அவர் செய்த சிற்பங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரெஜிபோமில் அவர் தயாரித்த கேடகம்




கலாபூஷணம் விருதுபெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கலாபூஷணம் விருதுக்காக அவரை கௌரவித்தபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓவியத்துக்காக அவரை கௌரவித்தபோது...



பேரனுடன் மகிழ்வுறும்போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலையில் பக்குவமாய் பராமரித்த மருத்துவ உறவுகளிற்கும், அவ்வேளையில் நான் நலம்பெறவேண்டி மனதார இறைவனை துதிசெய்த மரியாதைக்குரிய என்குரு, குருத்தினி மற்றும் அனைத்து என் பிரியமான எனதருமை உறவுகளுக்கும் என் நன்றிகள் பலப்பல.

மற்றும் எனதுயிர் பிரிந்த துக்கத்திலும், என் இறுதிக்கிரியைகளுக்குரிய கடமைகளை செய்வதற்காகத் தோள்கொடுத்த சகோதரன் சந்திரன், செந்தூரன் மற்றும் மைத்துனர் சந்திரன், சகலன் சந்திரன், கந்தசாமி ஆகியோருக்கும் மலர்ச்சாலையிலும் எமது இல்லத்திலும் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கிரியைகளை சிறப்பாக நடத்த உதவிய மகேந்திரன், பகீரதன் ஆகியோருக்கும், திருமுறைகள் ஓதியோருக்கும், தொல்புரம் மக்கள் சார்பாக உரையாற்றி கௌரவித்த கண்ணன் அவர்களுக்கும், இந்த அசாதாரண சூழ்நிலையில் கூட காடுவரை என்னோடு பயணித்து என்னை வழியனுப்பி வைத்த நவாலி வாழ் மக்களிற்கும், என் இறப்பிற்காக வருந்தி நேரிலும், தொலைபேசியிலும், முகநூல் வழியாகவும் அஞ்சலி செலுத்திய அனைத்து பிரியமானவர்களிற்கும் என் ஆத்மார்த்தமான நன்றிகளும் வணக்கங்களும்.

மேலும் 31 நாளும் எனது மனைவி மற்றும் மகளிற்கு உதவியாயிருந்து ஆறுதல் அளித்து வந்த என் உறவுகள் அனைவருக்கும் இம் மலரை சிறப்பாக அச்சிட்டு வெளியிட உதவிய அனைவருக்கும் என் நன்றிகள். உங்கள் அன்பை என்றும் நான் மறவேன். எனதுலகிற்கு நான் சென்றாலும் உங்கள் மனமதில் நான் நிலையாக வாழ்ந்துகொண்டு தான் இருப்பேன் என்ற நம்பிக்கையோடு கண்ணீருடன் விடைபெறுகிறேன்.

பொய்த்தன்மைத்தாய மாயப்போர்வையை
மெய்யென்றெண்ணும் வித்தகத்தாய் வாழ்வு வேண்டி
நான் விரும்புகில்லேன்.

- பவன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்




எங்கள் இல்லத் தலைவன் கந்தையா சரவணபவன் அவர்கள் அமரத்துவம் எய்திய செய்தியறிந்து வருகை தந்து எங்கள் துயரத்தில் பங்குகொண்டோர், கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டு வெளியிட்டோர், தொலைபேசி, தொலைநகல், முகநூல் மூலம் அனுதாபச்செய்தி தெரிவித்தோர், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர், இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டோர், இம் மலரை அழகுற அச்சிட்டு தந்த யாழ் ரூபன் அச்சகத்தினருக்கும் இவ்வண்ணம் எமக்கு பல்வேறு வழிகளில் அரிய உதவிகள் ஆற்றிய அன்பு இதயங்களுக்கு உள்ளன்புடன் கூடிய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அக்ஷயஅபிராமி,** **இங்ஙனம்,**
**முருகமூர்த்தி கோவில் வீதி,** **குடும்பத்தினர்.**
**நவாலி கிழக்கு,**
**மானிப்பாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

olaham Foundation.
| aavanaham.org



றூபன் பிறிண்டேர்ஸ்,
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org